 Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 24 புதன்கிழமை (10-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:318


# தேசிய அரசு அமைப்பதற்கு பொ.ஐ.மு. மீண்டும் முயற்சி!

கொழும்பு,ஒக்.10

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியிருக்கும் இவ்வேளையில -

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சமரசப் பேச்சு நடத்தும் முயற்சியாக அரசுத் தலைவர்கள், நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளை ரணில் விக்கிரமசிங்கவிடம் தூது அனுப்பியிருப்பதாகவும் -

ஆனால் ரணில் விக்கிரமசிங்க அதற்குச் சாதகமாகச் செயற்பட இணங்கினாரா என்பது குறித்துத் தகவல் ஏதும் தெரியவில்லை எனவும் -

'கொழும்பு பேஜ்' இணையத் தளம் நேற்றுச் செய்தி வெளியிட்டது.

ஐ.தே.கட்சியுடன் இணைந்து சர்வ கட்சி அரசு ஒன்றை அமைப்பது குறித்து அரசுத் தலைவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஐ.தே.கட்சித் தலைவர் இணங்கு வாரானால் அவருக்குப் பிரதமர் பதவியை அளிப்பது குறித்துப் பரிசீலிப்பதற்கும் தாங்கள் தயாராக இருப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மூத்த தலைவர்கள் தனிப்பட்ட முறையில் தெரிவித்தனர். (உ-3)

## அரச தரப்பு எம்.பி. நேற்று எதிரணிக்கு குத்துக்கரணம்!

கொழும்பு,ஒக்.10

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பியாகப் பதவி வகிக்கும் பந்துல குணவர்த்தனா நேற்று எதிர்த்தரப்புக்குக் குத்துக்கரணம் அடித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா தலைமையில் கூடிய சமயம் பந்துல குணவர்த்தன சபாநாயகரின் அனுமதியுடன் உணர்ச்சிபூர்வமான உரையை நிகழ்த்திய பின்னர் எதிர்த்தரப்பு ஆசன வரிசையில் சென்று அமர்ந்துகொண்டார்.

எதிர்த்தரப்பில் இருந்து சுயாதீனமாக இயங்கப் போவதாக சபையில் அறிவித்த அவர், தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னார்.

பந்துல் குணவர்த்தனா நாடாளுமன்றத்தில் நேற்று உணர்ச்சி ததும்ப பேசுகையில் மேலும் கூறியதாவது:-

கடந்த ஒரு வருடகாலம் எமது கட்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிருப்திக் குழுவினர் இன்று கட்சி தாவுவர்?

## நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான நாளைய விவாதத்தில் தூள் பறக்கும்

கொழும்பு,ஒக்ரோபர்10

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாளை நாடாளுமன்றத்தில் தூள்பறக்கும் விவாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் அதே வேளை -**

**இந்தப் பிரேரணையின் மூலம் அரசைப் பதவி கவிழ்க்கும் முயற்சிக்கு முன்னோடியாக, அரசுத் தரப்பின் அதிருப்திக்குழு எம்.பிக்கள் இன்று நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது அரசுத் தரப்பிலிருந்து எதிர்க்கட்சித் தரப்புக்கு மாறுவர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

அரசுத் தரப்பு எம்.பிக்கள் கட்சி மாறுவதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியாக நேற்று மாலை அவர்கள் அனைவரும் கூண்டோடு ஜனாதிபதி மாளிகைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். நேற்று பல மணி நேரம் அங்கு கூட்டம் மற்றும் கீலந்துரையாடல்கள் நடைபெற்றதாகத் தெரிகின்றது.

தமது தரப்பில் இருந்து எம்.பிக்கள் கட்சி மாறாமல் தடுப்பதற்கான வியூகங்களை வகுப்பதில் அரசுத் தரப்புத் தலைவர்கள் நேற்றிரவு வரை மும்முரமாக ஈடுபட்டிருந்தனர் என்றும் -

எனினும் அவர்கள் மத்தியில் நம்பிக்கையீனம் தென்படுவதாகவும் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## திவ்வியனும் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.10

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு யாழ. சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ்பல கலைக்கழக மாணவனான கிருஷ்ணசாமி திவ்வியன் மற்றும் வர்த்தகரான மகேந்திரநாதன் சங்கர் ஆகியோர் மீண்டும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 23.ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் உத்தரவிட்டார். (க-10-ரி)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; வெற்றி உறுதி என்கிறார் ரணில்

கொழும்பு.ஒக்.10

'அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுவது உறுதி என்று ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தற்போதைய ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டும் என்றே சகலரும் விரும்புகிறார்கள். எனவே சகல உறுப்பினர்களும் கலந்துகொண்டு பிரேரணை நிறைவேற உதவவேண்டும் என்றும் அவர் அங்கு கேட்டுக்கொண்டார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணி என்ற அமைப்பின் பெயரில், யானைச் சின்னத்தில் போட்டியிட ஏற்கனவே சிலகட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் அவர் கூறினார். (க-3)

## சிப்பாய்கள் இருவர் காயம்

கொழும்பு,ஒக்.10

முகமாலைப் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் இரு சிப்பாய்கள் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

காயமடைந்த படையினர் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நாகர்கோவில் நிலைகள் மீது புலிகள் ஆட்லறித் தாக்குதல்

### இரு சிப்பாய்கள் பலி நால்வர் காயம்

கொழும்பு,ஒக்.10

நாகர்கோவல் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக்காலை 5 மணி முதல் 6மணி வரை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர் மற்றும் நால்வர் காயமடைந்தனர் என்று சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

படையணி மீதும் இராணுவ 'ராடர்' நிலையம் மீதும் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர் என்றும் -

படையினரும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் - மேலும் அந்த ஏஜென்சி தெரிவித்தது. (க-3)

## இரு மிதிவெடிச் சம்பவங்கள்:

## தென்மராட்சிப் பகுதியில் நேற்று இருவர் கால்களை இழந்தனர்

யாழ்ப்பாணம்,ஒக்.10

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இரு மிதிவெடிச் சம்பவங்களில் இருவர் தமது கால்களை இழந்தனர்.

சரசாலை தெற்கைச் சேர்ந்த கதிரன் நாகமுத்து (வயது 64) என்பவர், கல்வயல் பகுதியில் கொப்பறா பொறுக்கச் சென்ற சமயமும் -

சாவகச்சேரியைச் சேர்ந்த சிவராஜா சிவமோகன் (வயது 23) என்பவர் தமது வீட்டைப் பார்க்கச் சென்ற சமயமும் -

நேற்றுக் காலை தமது வலது கால்களை முழங்காலுக்குக் கீழ் இழந்தனர்.

இவர்கள் இருவரும் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-9-10-15)

### வீட்டின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தி

## பீரிஸ் நாடாளுமன்றம் செல்வதை தடுத்த அரச ஆதரவாளர்கள்!

கொழும்பு,ஒக்.10

அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கக் கூடாது என்று கோரி நூற்றுக்கணக்கான பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்கள் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் வீட்டுக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் அவர் நாடாளுமன்றத்துக்கு சமுகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

நாடாளுமன்றம் செல்வதற்காக பீரிஸ் தயாராகிக் கொண்டிருந்த சமயம் அவரது வீட்டுக்கு முன் கூடிய பலர் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகக் கூறப்பட்டது.

பீரிஸ் நாடாளுமன்றத்துக்கு வரு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம் சென்ற 14 ஈழ அகதிகள்

சென்னை,ஒக்.10

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 14 ஈழ அகதிகள் நேற்றுக் காலை இராமேஸ்வரம் வந்தடைந்ததாக தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐந்து பெண்களும், மூன்று குழந்தைகளும் அவர்களில் அடங்குவர்.

இராமேஸ்வரத்தில் வைத்து விசாரணை செய்த தமிழக அதிகாரிகள் பின்னர் அவர்களை மண்டபம் முகாமுக்கு அனுப்பிவைத்தனர். (க-3-9)

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவன் நீதிமன்றில் ஆஜர்!

### 23ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக்.10

கடந்த மாதம் 18 ஆம் திகதி வீட்டில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவன் நேற்று காங்கேசன துறை குற்றத்தடுப்புப் பொலீஸாரால் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த மாணவனான காந்திராஜ் நிரோசன் (வயது18) என்பவரே இவ்வாறு பொலீஸாரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுப் பொலீஸாரால் இவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த பல மாதங்களாக அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த திருகோணமலை, கூனித்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவனேஸ்வரன் என்பவரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இவரையும் எதிர்வரும் 23.ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (க-10-ரி)

## கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக் கிண்ணம்:

# மாவட்ட மட்ட ஆட்டங்கள் யாழ்.நகரில் 18இல் ஆரம்பம்

## அணித் தெரிவுக்கு வீரர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக் கிண்ணத்துக்கான மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்களுக்கு இடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் 29ஆம் திகதிவரை யாழ்நகரில் நடைபெறவிருக்கின்றன.

இந்த ஆட்டங்களில் யாழ். மாவட்ட அணியுடன், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களின் அணிகளும் பங்கு பற்றுகின்றன.

இக்சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் யாழ்மாவட்ட அணியைத் தெரிவு செய்வதற்காக கீழ்வரும் கழகங்களைச் சேர்ந்த வீரர்களை இன்று மாலை 4.30 மணிக்கு அருண்ஸ் மண்டபத்தில் சமுகமளித்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

★ ஜொனியன்ஸ் வி.க. - பி. லவேந்திரா, ஏ.ஜே. கௌரிபாகன், கே. பிரதீபன்.

★ ஜொலிஸ்ரார் வி.க. - எஸ். சிவராஜ், எஸ்.லக்ஸ்மிகாந், என். முரளிதரன், ஆர்.கிருஷ்ணராஜ்.

★ சென்ரலைட்ஸ் வி.க. - ரி. தனேஷ்காந்த், எம்.காண்டீபன், ஆர்.சாள்ஸ், எம்.பிருந்தாபன்.

★ யாழ்பல்கலைக்கழகம் - எஸ். மகேந்திரராஜ், எஸ்.விமலன், ஆர். சாஜகான், எஸ்.சிறீதரன், கே.சசிகரன்.

★ பற்றீஸியன் வி.க. - ஏ.எஸ். நிசாந்தன், என்.சுரேஷ்குமார், ரி. முகுந்தன், தேவராஜன்.

★ மானிப்பாய் பரிஷ் வி.க. - ஜெயதீபன், ஜே.வீரசிங்கம், நவீனன், அன்பழகன், ஜெயரூபன்.

★ கே.ஸி.ஸி. வி.க. - சிவஸ்காந்தன, சிற்சபேசன், சபானந்த், ஜனார்த்தனன்.

★ யூனியன் வி.க. - டினேஸ்,

★ யங்ஸ்ரார் வி.க. - ஆர்.பிரதீபன், எம்.ஜொனிட்டன்.

★ ஸ்ரான்ஸி வி.க. - கே. செல்வராசா, ரஜனிகாந்த், வித்தியாசாகரன். (உ-3)

## செயல்முறைப் பரீட்சை

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று எதிர்வரும் டிசெம்பரில் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு செயல்முறைப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களையும், 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜி.சீ.ஈ உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர் களையும் நாளை வியாழக் கிழமை காலை 9மணிக்கு பாடசாலைக்கு சமுகம் தரும்படி பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.(ம-ரி)

## கொக்குவிலில் மோட்டார் சைக்கிள் கடத்தல்!

கொக்குவில் பகுதியில், பொற்பதி வீதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இராணுவப் பாணி சீருடையுடன் வந்த இனந்தெரியாத நபர்கள் ஆயுதமுனையில் மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கடத்திச் சென்றுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

பொற்பதி வீதியைச் சேர்ந்த எஸ்.அசோகன் என்பவரது மோட்டார் சைக்கிளே கடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)

## ஆங்கிலதினப் போட்டி: அதிபர்களின் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.10

திருகோணமலையில் எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ள ஆங்கிலதினப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற மாணவர்கள் மற்றும் மாணவர்களுடன் செல்லும் ஆசிரியர்கள் ஆகியோரின் விவரப் பட்டியலை இன்று காலை 'ரான்' அலுவலகத்தில் கையளிக்கும்படி சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை யாழ்.மாவட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் க.இராஜதுரை கேட்டுள்ளார்.

மாணவர்களின் பயண ஏற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலவசமாகச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-3)


### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1966ஆம் ஆண்டு பிறந்த குற்றமற்ற சாதகத்தையுடைய வாய்பேச முடியாத மணமகனுக்கு அழகிய வாய்பேச முடியாத மணமகள் தேவை. சீதனம் எதர்பார்க்கப்பட மாட்டாது.

தொடர்புகளுக்கு:-
விளம்பர இல. 1371,
மே/பா உதயன்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம
பேராசிரியர்
சு. வித்தியானந்தன
### நினைவுப் பேருரை

காலம்:- இன்று (2001.10.10) புதன்கிழமை மாலை 3.00 மணி.

இடம்:- கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்

நினைவுப்பேருரை நிகழ்த்துபவர்:- பேராசிரியர் செ. பாலச்சந்திரன பீடாதிபதி, கலைப்பீடம்.

தலைப்பு:- "பஃறுளியாறும் பன்மலையடுக்கமும்"

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்.
2001.10.09
(C/18625)



### UNIVERSITY OF JAFFNA
FACULTY OF SCIENCE
**Third Examination in Science** (First Semester), **2001**

The above examination, which was scheduled to commence on 08.10.2001, has been postponed by seven days.

There is no change in the day, time and the venue. All the dates have been postponed by seven days.

The Time-Table is displayed on the Notice Boards.

The lectures and practical classes for the Third year Second Semester will commence on 22.10.2001.

**- Registrar.** (C/18624)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சென்.பெனடிக்ற் றோ.க.த. பாடசாலை மாணவனும்
சுதா - கமலா தம்பதியினரின்
புதல்வனுமான
செல்வன் அஜந்தன்

புலமைப்பரிசில் பரீட்சையில் 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைவதற்கு வழிகாட்டியாக இருந்த அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*308, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.* (93269) - குடும்பத்தினர்.



ஸ்ரீராமஜெயம்
### நன்றி கலந்த பாராட்டுக்கள்

யா/புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை மாணவி
செல்வி அருணகிரி சாயினி



அவர்கள் 2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில 156 புள்ளிகளைப் பெற்றுச் சிறப்பாகச் சித்தியடைந்தமைக்கு இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்குச் சிறந்த முறையில் கல்வியறிவை ஊட்டி ஆக்கமும் ஊக்கமும் அளித்த சென். ஜோண் பொஸ்கோ பாடசாலை அதிபருக்கும், ஆசிரியர்க ளுக்கும் மற்றும் ரியூசன் நிறுவன ஆசிரியர்களுக்கும் நன்றிகலந்த பாராட்டுக்கள் பல தெரிவித்துக்கொள்கிறோம் .

மேலும் இவர் கல்வியில் மேன்மேலும் சிறக்க வாழ்த்துபவர்கள்

அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா குடும்பம், சத்தி, மாமாமார் குடும்பம் (ஜேர்மனி) ஆசை அண்ணா (U.K), அருமைச் சகோதரிகள், பெரியப்பா, சித்தப்பா குடும்பம் (France), அன்பு அத்தைமார் (வவுனியா).

*ஆரணி மில்ஸ்,*
*246, 248, நாவலர் வீதி,*
*இலுப்பையடிச் சந்தி,*
*யாழ்ப்பாணம்* (93261)



### நன்றிகள் பல...



எமது மகன்
செல்வன் இரவீந்திரன் சஜீவன்
(திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவனும், யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை பழைய மாணவனும்)

2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் சிறந்த சித்தியடைய வழிகாட்டிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விநிறுவனத்தினர், வினாத்தாள்கள் வழங்கியுதவிய 'சதா பொன்ஸ்' நிலையத்தினர் யாவரையும் நன்றிகள் பல கூறி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*இல.33, ஜனனி மஹால்,*
*பருத்தித்துறை.* (93265) - குடும்பத்தினர்.



ஸ்ரீவல்லிபுரேசன் துணை
### பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்
புருஷோத்தமக்குரு ராஜாராம்
யா/காசிநாதர் வித்தியாலயம் துன்னாலை



2001ஆம் ஆண்டு 5ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 125 புள்ளிகளைப் பெற்ற செல்வன் ராஜாராம் அவர்களையும் அவரது ஆசிரியரையும் வல்லிபுரேசனின் நல்லாசிகள் பெறுமாறுகூறி பாராட்டி வாழ்த்தும்.

அன்புப் பெரியப்பா,
அன்புப் பெரியம்மா,
அன்பு அண்ணன்மார்.

*சிவன்கோயிலடி,*
*ஆவரங்கால்.* (93266)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/துாவடி இ.து.க. பாடசாலை
5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2001

எமது பாடசாலை மாணவர்களான

| | |
|---|---|
| 1) இராஜேஸ்வரக்குருக்கள்ஸ்ரீராம்-142 | 4) கௌசிகா பாலேந்திரன் - 119 |
| 2) வரதராஜமூர்த்தி சஞ்சயன் -142 | 5) கிரீவர்த்தினி சோமசுந்தரம் - 118 |
| 3) இரஞ்சன் டில்லுக்சன் -133 | 6) அருமைநாயகன் சிவரஞ்சன் - 118 |

இவர்களுடன் அண்மித்த புள்ளிகளைப் பெற்ற
(1) அருள்நந்தி கோகுலரூபன் -117 (2) மயூரி லோகேஸ்வரசர் -115
சித்தியடைந்த பிள்ளைகளையும், வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும், இவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/துாவடி இ.து.க. பாடசாலை.
(C/18627)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
மாணவன்
செல்வன் வரப்பிரசாதம் அனுசன்

அவர்கள் 2001-5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரைப் பாராட்டுவதுடன் இவர் கல்வியில் மேலும் சிறந்து விளங்கவேண்டுமென வாழ்த்துவோர்.

- அங்கிள், பூஅன்ரி, அக்கா.

*மணல்தறை லேன்,*
*கந்தர்மடம்.* (93263)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
சாஜிபானு இராஜேந்திரன்
(139 புள்ளிகள்)



செல்வி
அமுதப்பிரியா சண்முகரட்ணம்
(137 புள்ளிகள்)

யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலய 2001 - 5 ஆம் தரப் புலமைப பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளான செல்வி சாஜிபானு இராஜேந்திரன் (139 புள்ளிகள்), செல்வி அமுதப்பிரியா சண்முகரட்ணம் (137 புள்ளிகள்) பெற்றதையிட்டு பாடசாலை அதிபர், கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி இராஜேந்திரன்,
திரு.திருமதி சண்முகரட்ணம்
(பெற்றோர்கள்)

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (93267)



### உள்ளத்து உணர்வலைகள்

எமது துருப்பின் சாரணத் தலைவர்
திரு.மு.ஜோதீஸ்வரன் *(முன்னாள் துருப்புத் தலைவர்-1992)*
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி அரியமலர் முருகேசு
அவர்கள்

05-10-2001 அன்று சிவபதமெய்தியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

4 ஆவது யாழ்ப்பாணம்.
யாழ்.இந்துக் கல்லூரி,
சாரணர் துருப்பு.
(C/18617)



### பாராட்டி வாழ்த்துகிறோம்



*2001 இல் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் அதியுயர் 170 மதிப்பெண்ணைப் பெற்ற எமது புத்திரி*

செல்வி நாகேந்திரன் கீர்த்தனா

*மாவட்டத்தில் 03ம் இடத்தைப் பெற்றமைக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த தான் கல்வி கற்ற "யா/சுண்டுக்குளி மகளீர் கல்லூரி", "இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்" அதிபர்களையும், ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.*

சி.க.நாகேந்திரன்
(கிராம உத்தியோகத்தர்)
குடும்பத்தினர்.

91, கனகரத்தினம் றோட்,
அரியாலை.

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய**

கட்டடத் திருப்பணிக்காக ரூபா ஒரு லட்சம் ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக



மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்

**உயர்திரு. கே.வி.குகேந்திரன்**

(ஜெகன்)

அவர்களையும்



வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டை தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் இந்துசமய விவகாரப் பொறுப்பாளருமாகிய

**உயர்திரு. ந.திரிலோகநாதன்**

அவர்களையும்

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினர்.

*பத்திரகாளி கோயிலடி,*
*சுழிபுரம்.* (93252)


## மாநகர சபை தீர்மானம்

யாழ்.மாநகர சபையில் தற்காலிக சிற்றூழியர்களாகக் கடமையாற்றுபவர்களை பணியிலிருந்து உடனடியாக நிறுத்துவதில்லை என மாநகர சபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்காலிக சிற்றூழியர்களின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு வேறு பணிகளில் அவர்களை ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக மேயர் ந.ரவிராஜ் தெரிவித்தார். (ஒ-9)

## ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக வந்துசேரவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.10

பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 85 லட்சம் ரூபா நிதியில் இதுவரையும் 52 லட்சம் ரூபாவே யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தில் இருந்து 16 உள்ளூராட்சி சபைகளிலும் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும்-

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திடம் இருந்து மிகுதிப் பணமான 33 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10)


**நிகழ்ச்சி இரத்துச் செய்யப்பட்டுள்ளது**

**உரும்பிராய், இணுவில்,மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகங்கள்**

We Serve

**12.10.2001 இல் மேற்படி கழகங்கள் இணைந்து நடத்த இருந்த இலவச கண் பரிசோதனை முகாம் தவிர்க்க முடியாத காரணங்களால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கவலையுடன் அறியத்தருகின்றேன்.**

த.திருநாவுக்கரசு
செயலாளர்
உரும்பிராய் லயன்ஸ் கழகம்

(C/18619)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்

**திரு.நடராஜா பரமானந்தம் (S.L.P.S -I)**

**அவர்கள் அதிபர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை மன மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
**யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.**

(C/18621)


# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2001

1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கத் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1)ஆம் பிரிவின் படி 2001 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க் காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்துக்கு பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2.2 பிரதேச செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்கள் அடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

3) ஏதாவது ஒரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தை பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 2001ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் விடுவித்துக் கொள்ளலாம்.

4.1 இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதிக் கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

4.2 பதியப்படுவதற்கான தகைமை பற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ் விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

*செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2001. 10. 10* (C/18622)

**பதிவு அலுவலர்**
**தேர்தல் மாவட்ட இலக்கம் - 10**
**யாழ்ப்பாணம்.**

# ஒரு தேருநராகப் பதியப்படுவதற்கான விண்ணப்பப்பத்திரம் - 2001

----------------------------------------பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாகப் பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

----------------------------------------ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராகப் பதிவு செய்துகொள்ள விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2.1: முழுப்பெயர்:----------------------------------------

2.2: முகவரி :----------------------------------------

----------------------------------------

2.3 பிறந்த திகதியும் வயதும் :----------------------------------------

2.4 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?

----------------------------------------

2.5 பால் :----------------------------------------

2.6 இனம்:----------------------------------------

2.7 பதிவு மூலம் இலங்கைப் பிரஜை ஆயின் பிரஜாவுரிமைப்பத்திர இலக்கத்தைக் குறிப்பிடுக:

----------------------------------------

2.8 தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம் :

----------------------------------------

2.9 கிராம உத்தியோகத்தரின் பிரிவு:----------------------------------------

---------------------------- ----------------------------

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

### கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகிறது/செய்யப்படவில்லை. சிபார்சு செய்வதாயின் பின்வரும் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

வாக்கெடுப்புப் பிரிவு:----------------------------------------

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:----------------------------------------

வீட்டு இலக்கம்:----------------------------------------

கிராமம்/வீதி:----------------------------------------

----------------------------------------

கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும் பிரிவின் இலக்கமும்

திகதி:----------------------------------------

# திறனூட்டும் செயன்முறையில் உளவளத் துணையின் பங்கு

டாக்டர்
இ. சிவசங்கர்

உலக உளநல நாள் இன்றாகும். இந்த ஆண்டுக்கான தொனிப் பொருள் 'வேலைப் பளுவும் உளநலனும்' ஆகும். இதனையொட்டியே இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

உளவியல் புலத்தில் உளச்சிகிச்சை, உளவளத்துணை என்ற பதங்கள் உள்ளன. உளவியல் ரீதியாக அணுகப்படும் செயன்முறைகளுக்கே இப்பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிலர் இந்த இரண்டு பதங்களையும், எல்லா உளவியற் செயன்முறைகளையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்துவர். அந்த வகையில் உளச்சிகிச்சையும், உளவளத்துணையும் ஒத்த சொற்களாக எடுத்தாளப்படுகிறது. அதே வேளை நீண்ட காலத்திற்குத் தொடரப்பட்டு ஆளுமை மீள்கட்டமைப்பில் பங்கெடுக்கும் உளப்பகுப்பாய்வு, நடத்தைச் சிகிச்சை போன்றவற்றை உளச் சிகிச்சைகள் என்றும், குறுகிய காலத்திற்கு மட்டும் தொடரப்பட்டு ஆளுமை மீளக் கட்டமைப்பில் பங்கெடுக்காது மீள் கற்பித்தல் பொறிமுறையைப் பயன்படுத்தும் செயல்முறைகளை உளவளத்துணை என்றும் பிரித்துப் பார்க்கலாம்.

உளவளத்துணை, உளச்சிகிச்சை என்ற பதங்கள் இரு வேறு செயற்பாட்டுத் தளங்களில் நிகழும் செயல்முறைகளுக்கு இடப்பட்ட பெயர்கள் என்று பார்ப்பது இத்துறையில் தெளிவையும், பாதுகாப்பையும் தரும். ஆளுமை மீள் கட்டமைப்பில் ஈடுபடுவதற்குச் சிகிச்சையாளர் ஆழமான பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். அன்றேல் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் அதே வேளையில் மீள் கற்பித்தல் முறை குறைந்த பயிற்சியுடன் பாதுகாப்பாகச் செயற்படுத்தக்கூடியது. இக் கட்டுரையில் மீள் கற்பித்தல் முறையே விளக்கப்பட்டுள்ளது. ஆளுமை மீள் கட்டமைப்புச் செயல்முறைகள் யாழ்ப்பாணத்தில் தற்பொழுது கைக்கொள்ளப்படுவதில்லை.

உளவளத்துணையில் இங்கு துணையாளர், துணைநாடியுடன் ஏற்படுத்தும் உறவை, ''உதவும் உறவு'' எனலாம். இங்கு 'உதவுதல்' என்பது 'ஒருவரின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை வழங்குவது' என்று கருதப்படுவதில்லை. ஒருவனுக்கு ஒரு நேர உணவிற்கு மீனை வழங்குவதைவிட அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதே உண்மையான, நிரந்தரமான உதவியாகும். அதேபோன்று உளவியல் ரீதியாக சிக்கலுக்குட்பட்டவரை, அச்சிக்கலுக்கூடாக வளர்ந்தெழுந்து தொடர்ந்தும் தனக்கேற்படுகின்ற பல்வேறு சிக்கல்களைத் தனே முகங்கொடுத்து திறமையுடன் கையாண்டு செல்லும் திறனை ஏற்படுத்தி விடுவதே ''உளவியல் உதவி'' எனப்படும் அடிப்படையில் இச் செயற்பாடே உளவளத் துணையில் நடைபெறுகிறது.

துணைநாடியானவர் தனது எண்ணங்களை, உணர்வுகளை, பிரச்சினைகளை மனந்திறந்து வெளிக்கொணர்வதினூடாக தன்னைத் தானே விளக்கிக்கொள்ள உதவும் ஓர் உறவை ஏற்படுத்துவதற்கு இச்செயன்முறை முற்படுகிறது. இங்கு துணையாளர், துணைநாடியின் அந்தரங்க விடயங்களைப் பலவந்தப்படுத்தியோ, நுட்பங்களைக் கையாண்டோ தோண்டி எடுப்பதில்லை மாறாக, துணைநாடியானவர் தனக்கு விருப்பமானதை, தேவையானதை வெளிக்கொணர்வதற்கான ஒரு வெறும் ஊக்கியாகவே துணையாளர் தொழிற்படுகின்றார். துணைநாடியானவர் நிபந்தனையற்ற நிலையில் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார். அவரது அனுபவங்கள், உணர்வுகள் துணையாளரினால் சீர்தூக்கி எடைபோடப்படுவதில்லை. அத்துடன் துணையாளரினால் முன்வைக்கப்படும் கேள்விகள், துணைநாடி தன்னைத்தானே ஆழமாகவும், விவரமாகவும் பார்த்துக்கொள்ள உதவும் நோக்கில் போடப்படுபவையேயன்றி தூண்டில் போட்டு இரகசியங்களை இழுத்தெடுக்கும் நோக்கில் போடப்படுபவையல்ல. துணையாளர் நிச்சயமாக ஒரு துப்பறிவாளன் போன்று செயற்படுவதில்லை. இங்கு துணைநாடி தெரிவிக்கும் தகவல்கள் முற்றிலும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தத் தகவல்கள் துணைநாடியின் குடும்ப அங்கத்தவர்களிடமோ நண்பர்களிடமோ அல்லது அவர்களின் மேலதிகாரிகளிடமோ தெரிவிக்கப்பட மாட்டாது. அவை அவர்களுக்கே சொந்தமான இரகசியமாக மதிக்கப்பட்டுப் பேணப்படும்.

உளவளத்துணைச் செயன்முறையில் துணைநாடியை அக்கறையுடன் செவிமடுப்பதாலும், தன்னை வெளிப்படுத்த ஊக்கப்படுத்துவதாலும் 'வெளிப்படுத்துகை' நிகழ்கிறது. தன் உணர்வுகளையும், எண்ணங்களையும் இயல்பாக வெளிக்கொணர்வதினூடாக, ஒருவர் தனது சூழ்நிலைகளை ஆராய்ந்து அறிந்து கொள்வதற்கும், தனது சிக்கல்களைப் புறவயமாகப் பார்ப்பதனூடாக அவற்றை இயல்பு நிலையில் எதிர்கொள்வதற்கும் வழியேற்படுகின்றது.

உளவளத்துணையின் போது வெளிப்படும் விடயங்களைக் கொண்டு, துணைநாடி எந்தவொரு சட்டகத்திற்குள்ளும் பொருத்தப்படாது, அவர் அவராகவே பார்க்கப்படுகிறார். துணைநாடியால் வெளிப்படுத்தப்படும் உணர்வுகள், தகவல்கள் என்பன சமூக, விழுமிய நெறிமுறைக் கண்ணோட்டத்தினூடாகப் பார்க்கப்படுவதில்லை. அத்துடன் குற்றங்காணுதலோ, தீர்ப்பிடுதலோ நிகழ்வதில்லை. இங்கு துணையாளர் மறையாசிரியராகவோ, நன்னடத்தைப் பொறுப்பாளராகவோ செயற்படுவதில்லை.

உளவளத்துணைச் செயற்பாடுகளின்போது அறிவுரை வழங்கலையோ, தமது முடிவுகளையும், விழுமியங்களையும், நம்பிக்கைகளையும் துணைநாடியின் மீது திணிப்பதையோ துணையாளர் நிகழ்த்துவதில்லை. துணையாளர் தொடர்ந்து கதைப்பதும், துணைநாடி ஆம், இல்லை என்று கூறுவதும் இதன் முறை அல்ல. மாறாக தனது நம்பிக்கைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்புடையதான முடிவுகளை எடுப்பதற்கு துணைநாடிக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது.

தனக்கு இருக்கும் சந்தர்ப்பங்களுள் தனது தனித்துவத்திற்குப் பொருந்துவதைத் தேர்ந்தெடுத்து முடிவுசெய்ய வழிகாட்டப்படுகின்றார். சரியான முடிவைத் துணையாளர் கண்டுபிடித்து துணைநாடிக்குத் தெரிவிப்பதில்லை. மாறாக துணைநாடியுடன் துணையாளர் கூட்டாகச் செயற்படுவதனூடாக, துணைநாடி தனது கருத்துக்களைத் தானே தெளிவாக விளங்கிக் கொள்ள உதவி, முடிவைத் தானே எடுப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றார். நடைமுறையில் தான் முடிவெடுத்த செயலின் பொறுப்பை துணைநாடியே பொறுப்பெடுக்கிறார் அதற்குத் தேவையான தன் நம்பிக்கை 'திறன் என்பன வளர்வதை உளவளத்துணைச் செயன்முறை நிகழ்த்துகிறது.

ஒருவர் தானே முடிவெடுத்துச் செயல்படுவதற்கான திறன் ஊட்டப்படுகின்றது. உளவளத்துணை என்பது ஒரு திறனூட்டும் செயன்முறையாகும். திறனூட்டும் செயன்முறை என்பது ஒருவரை உளவலுவடையச் செய்தலையும், செயற்பாடுகளைப் புரிவதற்கான ஆற்றல்களை வழங்குதலையும் குறிக்கும். இங்கு ஆதரவு, அனுசரணையுடன் கூடிய, வளர்ச்சிக்கு வேண்டிய சூழ்நிலைகள் வழங்கப்படுகின்றதேயன்றி, துணையாளர் தான் விரும்பியபடி துணைநாடியையும், சூழ்நிலைகளையும் மாற்றி அமைப்பது நடைபெறுவதில்லை. வளர்ச்சிக்குரிய சூழ்நிலைகள் வழங்கப்படுவதால் துணைநாடியின் உளவளங்கள் திரட்டப்பட்டு, அதனால் அவருடைய செயற்றிறன்கள் அடையாளங்காணப்பட்டு வெளிக்கொணரப்படுகின்றது. அத்துடன் முன்னர் உளச்சிக்கல்களினால் பயன்பாட்டுக்கு வரமுடியாதிருந்த செயற்றிறன்கள் மீட்டெடுக்கப்பட்டு பயன்பாட்டுக்குரியதாக்கப்படுகின்றது.

உளவளத்துணைச் செயன்முறையூடாகப் போகும் பொழுது துணைநாடியானவர் தன்னைப்பற்றியும், வாழ்வின் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பற்றியும், ஆழ்ந்த அகன்ற பார்வையைப் பெறுகின்றார். இதனூடாக எதிர்காலவாழ்வில் ஏற்படும் சிக்கல்களை அதற்குரிய எல்லாப்பரிமாணங்களின் ஊடாகத் துல்லியமாகவும், நுணுக்கமாகவும் பார்க்கும் திறனையும், சிக்கல்களின் தெளிவு சுழிவுகளுக்குள் புகுந்து கச்சிதமாக முடிவெடுத்து அதை நடைமுறைப்படுத்தும் உளப்பலத்தையும் பெறுகின்றார்.

ஒருவரைப் பூரண செயற்பாட்டுத்திறனுடையவராக உருவாக்குவதே உளவளத் துணையின்போது எய்தப்படும் இலக்காக அமைந்திருக்கும். ★

நன்றி: மனவெளி

---

## வாழ்த்தி மகிழ்கின்றோம்

♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠

### பேராசிரியர் கந்தையா குணரத்தினம்

கடந்த சனிக்கிழமை 06-10-2001 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது யாழ். பல்கலைக் கழகம் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் அவர்களுக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. அவர் மேலும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து உயர்கல்வி மாணவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் சிறந்த சேவையாற்ற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ச. சிறீஸ்கந்தராசாக் குருக்கள்,
(கோண்டாவில் மேற்கு,
மகாகணபதிப்பிள்ளையார் கோவில் பிரதமகுரு)

திரு. இ. மகேந்திரன்
(மகேந்திரன் களஞ்சியம் — கோண்டாவில் மேற்கு)

(93249)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 |  | 21 |
| 07 | | 09 |
| 1919 | | 2000 |

### அமரர் ஆழ்வாப்பிள்ளை ஏரம்பு

(ஓய்வு பெற்ற புள்ளி விபர உத்தியோகத்தர்)

திதி: புரட்டாதி மாத அபரபக்க அட்டமி
10-10-2001 புதன்கிழமை

அன்பின் இருப்பிடமாய்
ஆறிந்தோர் மனங்களிலே
ஆண்டொன்று போனாலும்
அகலாதிருக்கின்றீர்!
என்றும் உங்களை எண்ணி எண்ணி
ஏங்கித் தவிக்கும் யாம்
கன்றிழந்த பசுப்போலக்
கலங்குகின்றோம்!
புற்றளை சித்திவிநாயகர்
திருவருளால் தங்கள்
ஆன்மா சாந்தி பெற அவன் தாள்
பணிகின்றோம்!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திகிரி வளவு,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(93238)

---

## பெண் சாரணியர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ். மாவட்டப் பெண் சாரணியர் ஒன்றுகூடல் எதிர் வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (க-3)

## தந்தை குத்தியதில் மகன் காயம்

தென்மராட்சி, ஒக். 10

இடம்பெயர்வினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில் மகன் வியாபாரத்தில் ஈடுபடுவதை விரும்பாத தந்தை போத்தலை உடைத்து மகனைக் குத்திக் காயப்படுத்திய சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மருத்தித்துறை தும்பளையில் இடம்பெற்றது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவரே உடைந்த போத்தல் குத்துக்கு இலக்கான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-117)

---

## காணவில்லை

துன்னாலை, இந்திரன் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த

### கந்தையா பொன்னையா

என்பவரை (வயது—78) கடந்த 10-09-2001 அன்றிலிருந்து காணவில்லை. பொது நிறமும், உயரமானவரும் உச்சந்தலையில் முடி இல்லாதவருமான இவர் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

மயூரா தொலைத்தொடர்பு நிலையம்,
அல்வையம்பதி - துன்னாலை.
T. P. 070—212771

தகவல்: மகாராணி (மகள்). (93248)

---

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சிக் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளரும்,
வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினருமான
லயன் வே. தி. செல்வரத்தினம்
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி திருப்பதி முத்து

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(93243) வடமராட்சி லயன்ஸ் கழகம்.

## உதயன்

### பொதுத் தேர்தல் நிச்சயம்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை நாடாளுமன்றத்துக்கு வருகின்றது.

ஜே.வி.பியின் முண்டுடன் ஆட்சிக் கதிரையில் நீடிக்கும் பொ.ஐ.மு. அரசு, அந்தக் கதிரையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளுமா என்பது பெரும்பாலும் நாளை மாலை தெரிந்துவிடும்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் அரசு தோற்றால் உடனடியாக - ஜனநாயக வழிமுறைக்கு ஏற்ப - புதிய ஆட்சியை அமைக்கும் பொறுப்பை ஐ.தே.கட்சியிடம் தாம் கையளிக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கின்றார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

அந்தத் தகவல் உண்மையாக இருக்குமானால் -

ஜனாதிபதி குமாரதுங்க யதார்த்தத்தில் அப்படியே நடந்துகொள்வாராயின் -

அவர் சிறந்ததோர் ஜனநாயகவாதியாகவும் மதிக்கப்படுவார் என்பதில் ஆச்சரியமில்லை.

ஜனாதிபதி வெளியிட்டதாகக் கூறப்படும் இக்கருத்து - அல்லது ஜனாதிபதியின் பெயரால் கசியவிடப்பட்ட இக்கருத்து - நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு தோற்றாலும் ஆட்சி மாற்றம் வருமே தவிர, புதிய பொதுத் தேர்தலுக்கு வழிவகுக்காது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அதாவது, உடனடிப் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு இடமில்லை என்ற எண்ணத்தை விதைக்கும் விதத்தில் இத்தகவல் வெளியாகியுள்ளபோதிலும், இலங்கை அரசியலை அறிந்தவர்கள் யதார்த்த நிலைமை அப்படியல்ல என்பதை நன்கு புரிந்துகொண்டுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து இந்த அரசு தப்பிப் பிழைத்தால் கூட, பொதுத் தேர்தல் நடப்பதற்கு நீண்டகாலம் எடுக்கப் போவதில்லை.

ஜே.வி.பி. எனும் நொண்டிக் குதிரையில் ஏறி ஒரு வருடத்துக்கேனும் ஆட்சியைத் தொடர இந்த அரசு திட்டமிட்டிருந்தாலும், இந்தக் குதிரை அவ்வளவு காலத்துக்கு ஆட்சியை இழுத்துச்செல்லும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இல்லை. ஒரு சில மாதங்களுக்குக் காலத்தை ஓட்ட, ஜே.வி.பி. உதவினாலும் விரைவில் தேர்தலுகடு அரசு சென்றாகவே வேண்டும்.

நாளைய நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு தோற்கடிக்கப்பட்டால், ஐ.தே.கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்காமல் புதிய பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிடலாம்.

அப்படியில்லாமல், புதிய அரசை அமைக்கும் பொறுப்பை ஐ.தே.கட்சியிடம் ஜனாதிபதி ஒப்படைத்தால் கூட, ஒருசில மாதங்களுக்கேனும் கூட ஐ.தே.கட்சியின் ஆட்சி தாக்குப்பிடிக்குமா என்பது கேள்வியே.

இப்போது பல்வேறு கட்சிகளின் உதவியுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசை இலகுவாக ஐ.தே. கட்சியினால் தோற்கடிக்க முடிந்தாலும் கூட, புதிய அரசை அமைப்பதற்கு இந்தப் பல்வேறு கட்சிகளின் தயவிலும் ஆதரவிலும், ஐ.தே.கட்சி முற்று முழுதாகத் தங்கிநின்றேயாகவேண்டும்.

நெல்லிக்காய் மூடை போலப் பல்வேறு தரப்பையும் ஒன்றாகக் கட்டி ஆட்சியைத் தொடருவது - அதுவும் இன்னொரு கட்சியின் தலைவி, நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியில் இருக்க ஆட்சியைத் தொடர்வது - எவ்வளவு நெருக்கடியானது என்பது ஐ.தே.கட்சிக்குத் தெரியும். அதற்குத் தற்போதைய அரசே நல்ல உதாரணம்.

எனவே, ஆட்சி மாற்றம் வந்து, ஐ.தே.க. அரசு பதவியேற்றாலும், தன் நிலையை ஸ்திரப்படுத்துவதற்காக வேனும் அந்த ஐ.தே.க. அரசும் இயன்ற விரைவில் பொதுத் தேர்தலுக்குப் போய்த்தானாகவேண்டும்.

ஆட்சிப்பீடம் ஏறியதும் நாடாளுமன்றைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தும்படி நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் ஜனாதிபதிக்குச் சிபாரிசு செய்வதைத் தவிர, உத்தேச ஐ.தே.கட்சி அரசுக்கு வேறு வழியிருக்கப்போவதில்லை. அதற்குச் சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் தாமதமாகலாம். அவ்வளவுதான்.

எனவே ஆட்சி மாற்றம் வருகின்றதோ இல்லையோ விரைவில் பொதுத் தேர்தல் வரப்போவது நிச்சயம்; அதற்குக் கட்சிகள் தயாராகின்றன. இந்த முறையாவது அரசியல்வாதிகளுக்கு நல்ல பாடத்தைப் படிப்பிக்க மக்கள் தயாரா?

---

சுதந்திரக்கட்சி உடுப்பிட்டி அமைப்பாளர் உயிரிழந்த

# நெல்லியடி சூட்டுச் சம்பவம்: சிப்பாய்க்கு விளக்கமறியல்

கரும்புலிகள் தினமான கடந்த ஜுலை ஐந்தாம் திகதி இரவு நெல்லியடி நகரப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் கொல்லப்பட்டது தொடர்பாக இராணுவச் சிப்பாய் ஒருவர் நெல்லியடிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மரண விசாரணை கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மரணமடைந்தவரின் உடலில் ஏற்பட்ட காயங்களிலிருந்து அதிக அளவு இரத்தம் வெளியேறியதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி தனது வைத்திய அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததைக் கருத்திற் கொண்ட நீதிவான், துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட படையினரைக் கைது செய்ய உத்தரவிட்டார்.

இதனை அடுத்து பருத்தித்துறைப பொலீஸார் அன்றையதினமே லான்ஸ் கோப்ரல் ஜீ.எம்.பிரேமரத்தின என்ற இராணுவச் சிப்பாயைப் பொலீஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை எதிர்வரும் 19ஆம திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இராணுவ அதிகாரி நீதிமன்றில் மனு ஒன்றைச் சமர்ப்பித்ததையடுத்து சந்தேகநபரை பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்க நீதிவான் அனுமதியளித்தார்.

நெல்லியடியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் துன்னாலை கோவில் கடவையைச் சேர்ந்த மயில்வாகனம ஜெயக்குமார் என்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் பலியானது தெரிந்ததே. (ம-117)

### மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தி. மாணவருக்கு!

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து இவ்வருடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சங்கீதபாடப் பரீட்சை 15ஆம் திகதியும், விவசாய விஞ்ஞானம், மனைப்பொருளியல் ஆகிய பரீட்சைகள் 17ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.மாணவர்களும் அப்பாடங்களுக்குரிய ஆசிரியர்களும் செய்முறைப் பரீட்சை நடைபெறும் நாள்களில் பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் மத்திய கல்லூரிக்கு வருகைதருமாறு பதில் அதிபர் கேட்டுள்ளார். (ம)

# நாட்டு நடப்பு

**களவிலும் கவனம் வேண்டும்**

ஆச்சியும் அப்புவுமாய்
அடை மழை பெய்வதாலே
உச்சுவை அவிட்டுவிட்டு
உள் வீட்டில் உறங்கிவிட
கச்சிதமாய்ப் புகுந்த கள்வர்
கிழட்டு ரீ.வியைத் தூக்கிக்கொண்டு
முச்சக்கர வண்டி ஏற்றி
மூலையால் திரும்பும் போது
கீச்சு கீச்செனச் சத்தம் கேட்டு
கிழட்டுப் பெட்டியைத் திறக்க
ஆச்சி அடைவைத்த கோழி
அவுக்கெனப் பறந்து போச்சு!

*- விகடகவி.*

ஆப்கன் மீதான தாக்குதலை அடுத்து

# எரிபொருள் வாங்குவதற்கு மக்கள் நேற்று முண்டியடிப்பு

## போதியளவு கையிருப்பு உண்டு என்கிறது பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

அரியாலை,ஒக்.10

யாழ்.குடாநாட்டிலுள்ள எரி பொருள் விற்பனை நிலையங்களில் நேற்று மக்கள் முண்டியடித்து எரிபொருள்களைக் கொள்வளவு செய்வதில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என அஞ்சியே மக்கள் முண்டியடித்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்எண்ணெய், பெற்றோல், என்பன வழங்கப்பட்டன.

இதேசமயம் -

காங்கேசன்துறையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் டீசல், மண்எண்ணெய் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-17

# மஞ்சள் காய்ச்சல் நோய் இலங்கையில் தீவிரம்

கொழும்பு,ஒக்.10

இலங்கையில் மஞ்சள் காய்ச்சல் (ஹெப்படைட்டிஸ்) நோய் பரவி வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருவதனால், நாட்டில் உள்ள சகல குழந்தைகளுக்கும் இந்த நோய்க்கான தடுப்புமருநதை ஏற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமெரிக்காவில் உள்ள 'பில்ட் கிரேட் பவுண்டேசன்' என்ற அமைப்பு ஐந்து ஆண்டுகளுக்கு உதவியளிக்க முன்வந்திருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஏ.எம்.எல் பெலிகஸ்வத்தை நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் போலியோ, ஏற்புவலி, சின்னமுத்து, ரூபெல்லா, மூளைக் காய்ச்சல், குக்கல், கசம், ஷ்டீரியா போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்து வழங்கும் திட்டங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### முதியோர், சிறுவர் தினவிழா

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தின விழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில், பிரதேசத்தில் உள்ள முதியோரைக் கௌரவிப்பது, கரவெட்டி கோட்ட பாடசலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குவது போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். (ம-117)

### நாளை

புரட்டாதி 26
வியாழக்கிழமை
திதி : நவமி
பிற்பகல் 3.26 வரை
நட்சத்திரம் : பூசம்
முன்னிரவு 11.33 வரை
சுபநேரம் : 7.32 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

### பரிசளிப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்,10

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் செ.யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதமவிருநதினராக வடமராட்சி வலய விஞ்ஞான கல்விப்பணிப்பாளர் திருமதி சு. அருண்குமாரும் சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளார். (ம-4)

★ ★ ★

ஆனைப்பந்தி மெதடிஸ்த வித்தியாலய வருடாந்த பரிசுத்தினம இன்று புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.சோமோஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் பொன். இராமநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மக்கள் வங்கி முகாமையாளர் சி.பத்மநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர்களுக்கான பரிசில்களை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் வழங்குவார். (ம-4)

### உதயவாக்கு

பிறர் உன்னிடத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறாயோ, அப்படியே நீ பிறரிடம் நடந்துகொள்!

# காணாமற்போனோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை யாழ்.பொலீஸ் நிலையத்தில் மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தமது 5ஆம் கட்ட விசாரணைகளை இன்ஸ்பெக்டர் ஐ.பி.லியனகே தலைமையில் நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

இவ்விசாரணைகளைத் தொடர்வதற்காக 11சாட்சிகளை காணாமற்போனவரின் புகைப்படம் உள்ளிட்ட தேவையான ஆவணங்களுடன் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு வருகை தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

காணாமற்போனவர்களினதும் சாட்சிகளினதும் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ நல்லையா கேசரபிள்ளை மணிவண்ணன்(கோ.இல.பி120 - மட்டுவில் தெற்கு) சாட்சி: இராசரத்தினம் நாகமணி.

★ நடராஜா புதிராஜன் (கோ.இல.பி124 - கோப்பாய்) சாட்சி: என். இலட்சுமி.

★ பொன்னம்பலம் கண்ணதாஸன் (கோ.இல.பி125 - தச்சன்தோப்பு, கைதடி) சாட்சி: எஸ்.கனகம்மா.

★ அரியகுட்டி ஜெயகாந்தன் (கோ.இல.பி117 - கோட்டைக்காடு, மல்லாகம்) சாட்சி: சி.ரமணி.

★ சரஸ்வதி சௌந்தர்ராஜன் (கோ.இல.பி116 - மட்டுவில் வடக்கு) சாட்சி: நாகமணி, குட்டியன் தேவராஜ், ஆவரங்கால்.

★ வேலுப்பிள்ளை உதயகுமார் (கோ.இல.பி113 - கொடிகாமம்) சாட்சி: க.வேலுப்பிள்ளை.

★ மரியம்பிள்ளை ஞானராஜன் (கோ.இல.பி111 - பிடாரி கோயிலடி, யாழ்ப்பாணம்) சாட்சி: லூர்த்தம்மா மரியாம்பிள்ளை.

★ காசித்தம்பி நர்மதாஸன் (கோ.இல.பி108 - மீசாலை தெற்கு) சாட்சி: க.காசித்தம்பி.

★ சுப்பிரமணியம் முகுந்தகுமார் (கோ.இல.106 - இல.16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்) சாட்சிகள்: பொன்னுத்துரை, ஜே/79 கிராமஅலுவலரான சொக்கலிங்கம் பாலச்சந்திரன்.

★ சிவானந்தன் ரமணன்(கோ.இல.பி107 - மீசாலை கிழக்கு) சாட்சி: சிவானந்தன், கிராம அலுவலரான நாகலிங்கம் பரமசிவம் (கந்தர்மடம், யாழ்ப்பாணம்).

★ ஜீவநாயகன் மதியழகன் (கோ.இல.பி102 - தொல்புரம், சுழிபுரம்).

சாட்சி: தேவராஜ் ஆனந்தி, ஜே/169, கிராமஅலுவலரான இராசரட்ணம் ஸ்ரீதர்சன். (ம-9)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையைச் சேர்ந்த



செல்வன் யேசுநாயகம்
ஜெனிங்ஸ் ஜீவகன்
136 புள்ளிகள்



செல்வன் பிலிப்லியோனாட்
றெஜி றஜீவன்
140 புள்ளிகள்

*இவர்கள் 2001 – 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்களுக்கு கல்வியறிவு புகட்டி ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*
*மேலும் இவர்கள் இருவரும் கல்வியில் சிறந்து விளங்க அப்பா, அம்மா, அக்காமார், அத்தான், தர்ஷிக்குட்டி, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமிமார், மாமா, சித்தப்பா, பாட்டி ஆகியோர் மனமார வாழ்த்துகின்றனர்.*

பெற்றோர்
*சந்தை வீதி, மானிப்பாய்.* (93232) ப.யேசுநாயகம் (மாதகல்)


## 17 இலங்கை மீனவர்களை இந்தியா விடுவித்தது

நீர்கொழும்பு, ஒக்.10

இந்தியச் சிறைகளில் தடுத்து வைக கப்பட்டிருந்த 17 இலங்கை மீன வர்கள் நேற்றுமுன்தினம் விடுவிக் கப்பட்டனர்

நீர்கொழும்புப் பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மீனவர்களை இலங்கைக் கடற் படையினர் நேற்றுமுன்தினம் காலை இந்தியக் கடற்படையிடம் இருந்து பொறுப்பேற்றுக்கொண்டதாகத் தெரி விக்கப்பட்டது.

இவர்கள் 17பேரும் விரைவில் தத் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (ம-4)

## திருவாசக முற்றோதல்

புலோலி உபயகதிர்காமம் முரு கன் ஆலயத்தில் இன்று காலை 6.30 மணி தொடக்கம் திருவாசகமுற்றோ தல் இடம்பெறும். சாவகச்சேரி வித்த கம் குரு பரமசாமியும் வித்தக அன் பர்களும் இணைந்து இதனை நடத்த வுள்ளனர். (ம-117)


## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



யாழ்.பல்கலைக்கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் "முதுகலைமாணி"ப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட

அளவையூர்

அருட்கவி சீனியர் விநாசித்தம்பி ஐயா

அவர்களை மனமாரப் பாராட்டுவதோடு, அவரின் அருளாசி மேன் மேலும் இந்த மண்ணுக்குக் கிடைக்கவேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீநாகவரத நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கில்னர் லேன்,* நாதசுர வித்துவான்:
*யாழ்ப்பாணம்.* என்.கே.பத்மநாதன் குடும்பத்தினர்.

(C/18001)


# அமரர்
# ஆசீர்வாதம் ஹென்றி (J.P.)
## அவர்களின்
# 31ஆம் நாள் நினைவஞ்சலி மலர்

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்த அமரர் ஆசீர்வாதம் ஹென்றி அவர்கள் தம் வாணாளில் தனது சொந்த மண்ணுக்கும், தமிழ்கூறும் நல்லுலகத்துக்கும் அரும் பெரும் பணியாற்றியுள்ளார். பல தமிழ் அறிஞர்களுடன் அவருக்கிருந்த மிக ஆழமான, நெருக்கமான தொடர்புகள் அவரை தம்மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிக்கத் தூண்டியது. கத்தோலிக்க மதத்தின் பாதுகாவலராக இருந்து விழிப்புடன் செயற்பட்ட அவர், அவ்வப்பொழுது அறிக்கைகளும் வெளியிட்டுள்ளார். இயேசுக் கிறிஸ்த்துவில் மிக ஆழமான விசுவாசம் கொண்ட அவர் கத்தோலிக்க மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணி மகத்தானது. சுவாமி ஜெயசீலன் அடிகளார் எழுதிய "யாழ்ப்பான கத்தோலிக்க வரலாறு" எனும் நூலில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். புனித அந்தோனியார் ஆலய புனரமைப்புப் பணிகளில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசவ் ஆண்டகை அவர்கள் எமது பங்கில் குருவாக இருந்த காலத்தில் அவருடன் சேர்ந்து செயற்பட்டார். சுன்னாகம் பட்டினசபையின் உதவியுடன் ஆலயத்தின் மணிக் கம்பத்தை நிறுவினார். தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பங்குத் தந்தையின் குருமனை பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. அதைக் கட்டிமுடிப்பதற்கு முன்னாள் பங்குத் தந்தை ஞானப்பிரகாசம் அடிகளாருடனும், ஆலய நிர்வாக சபையுடனும் சேர்ந்து அதை நிறைவு செய்ய உழைத்தார்.

இவர் சுன்னாகம் பட்டினசபையில் 3ஆம் வட்டார உறுப்பினராகவும், உப தலைவராகவும் பணியாற்றினார். இற்றைக்கு 1972ஆம் ஆண்டளவில் அவர் நாகலிங்கம் அவர்களுடன் சேர்ந்து சுன்னாகம் பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியைக் கட்டி முடித்தார். இவருடைய பெயர் அக் கட்டடத தொகுதியில் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் நகரை அண்டிய பகுதியிலுள்ள வீதிகளில் குப்பைத் தொட்டிகள் அமைக்க உதவினார்.



**ஆசீர்வாதம் ஹென்றி**
**(J.P.)**

மண்ணகம் 23-07-1932 விண்ணகம் 10-09-2001

"உயிர்ப்பும் உயிரும் நானே; என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்."

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவர் சமூகத் தொண்டும், அரசியல் பணியும் ஆற்றியுள்ள, தன்னம்பிக்கை தளராத உள்ளம் கொண்டவராக தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம், தருமலிங்கம் ஆகியோர் மீது பற்றுக் கொண்டிருந்தார். தன் வாணாள் முழுவதும் தன் இறுதிக காலம் வரை அப்பழுக்கற்ற ஒரு சமூகத் தொண்டனாக - தமிழர்களின் ஒரு தலைவனாக - இலட்சியப் பற்றுள்ளவனாக விளங்கினார்.

நெசவுத் தொழிலைத் திறம்படச் செயற்படுத்த உதவி அரச அதிபருடன் கலந்துரையாடியதன் அடிப் படையில் பல ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தினார். அதனடிப்படையில் 1958ஆம் ஆண்டு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபையை நிறுவி அதன் இணைச்செயலாளராகக் கடமையாற்றினார். சமூகப் பிரச்சினைகளை தேசியமட்டத்துக்குக் கொண்டு சென்று தீர்வுகாண அதி கௌரவ அமைச்சர் W.தஹாநாயக்கா அவர்களை இங்கு அழைத்து சுன்னாகம் R.C. பாடசாலையில் பொதுக் கூட்டம் நடத்தினார். பின் அந்தோனியார் ஆலயத்தில் மதிய விருந்துபசாரமும் நடத்திமுடித்தார். அமைச்சரின் வருகையினால் 'யாழ்.கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் உதயமாகக் காரணமாகியது. சிறந்த மேடைப் பேச்சாளரான அவர் ஆண்டு தோறும் நடைபெறும் மேதின விழாவில் நெசவுத் தொழிலாளர் சார்பாக பங்குபற்றுவார். 'சுதந்திரன்', 'பாதுகாவலன்', 'உதயன்' பத்திரிகைகளில் ஆக்கங்களை எழுதுவார். உதயன் பத்திரிகையின் ஆசிரியர் திரு.வ.ம.கானமயில்நாதன் மற்றும் உதவிப் பொதுமுகாமையாளர் திரு.ந.வித்தியாதரன ஆகியோருடனும் நெருங்கிப் பழகியவர்.

அமரரின் 31ஆம் நாள் நினைவாக 10.10.2001 புதன்கிழமை அன்று சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் மதியம் 11.30 மணியளவில் (புதியநேரம்) நடைபெறும் இரங்கற் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, குடும்பத்தினர், உறவினர்.

மலர் வெளியீடு:
*பிரான்சில் வாழும்*
ஆசீர்வாதம் அம்புறோஸ் செபமாலை குடும்பத்தினர்

தொகுத்தவர்:
ம.ஜோண் பற்றிக்

(93226)




யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளின் இன்றறக்ட் கழகங்களின் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு அண்மையில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் தலைவர் டாக்டர் வை.யோகேஸ்வரன் தம்பதியரும் மற்றும் யாழ்.றோட்டறிக் கழகத்தின் புதிய தலைமுறை இயக்குநர் றொட்டேறியன் ஏ.ஜே.ஜி.ஜெயச்சந்திரன் வண.பிதா பொன்ஜே ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருபகுதியினரையும் முதல் இரு படங்களிலும் காணலாம்.

குழுநிலைச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் மாணவர் குழு ஒன்றை அடுத்துள்ள படத்தில் காணலாம். அவர்களுடன் றொட்டேறியன் ரவிகரன், றொட்டேறியன் வன்னியசிங்கம், றொட்டேறியன் சோமசுந்தரம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஐ)

### ஐந்து ஆண்டுகளின் பின்

# ஆலய வீதியைப் பயன்படுத்த படையினர் அனுமதி வழங்கினர்

தென்மராட்சி,ஒக்.10

அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் படையினரின் முகாம் அமைந்துள்ளதால் கடந்த ஐந்து வருடங்களாக பொதுமக்களின் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த ஆலய வடக்கு வீதியையும் தீர்த்தக் கேணியையும் பாவனைக்கு விடுவதற்குப் படையினர் அனுமதித்துள்ளனர். இதனை அடுத்து முகாமின் முன்னரங்க வேலிகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

ஆலய பரிபாலன சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உபதலைவர் ப.இரவீந்திரன் ஆகியோர் கடந்த ஞாயிறன்று வடமராட்சி பிரதேச படையணித் தளபதியுடன் நடத்திய கலந்துரையாடலையடுத்து படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த ஆலய வடக்கு வீதியையும் தீர்த்தக்கேணியையும் பொதுமக்களின் பாவனைக்கு விடுவதற்கு படையினர் இணக்கம் தெரிவித்ததாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் தெரிவித்தார்.

கடந்த ஐந்து வருடங்களாக ஆலயத்தில் மஹோற்சவம் நடைபெற்ற போதிலும் சுவாமி வெளிவீதியுலா வரமுடியாதநிலை காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

இப்பகுதியில் படையினர் தங்கியுள்ள அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தையும் விரைவில் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்க படையணித் தளபதி இக்கலந்துரையாடலில் இணக்கம் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

(ம-117)

### மந்திகையில் அரச காணியில்

# சட்டவிரோதமாகக் குடியேறிய இருவரையும் வெளியேற உத்தரவு

வடமராட்சி,ஒக்.10

மந்திகைப் பகுதியில் உள்ள அரச காணியில், சட்டவிரோதமாகக் குடியேறிய இருவரை உடன் வெளியேறுமாறு பருத்தித்துறை மேலதிக நீதிவான் அ.பிரேம்சங்கர் உத்தரவிட்டுள்ளார்.

இப்பகுதியில் கட்டப்பட்டு வரும் அரச உணவுக் களஞ்சியத்துக்கு இவர்கள் இடைஞ்சலாக இருப்பதாகப் பருத்தித்துறை பிரதேச செயலக குடியேற்ற அதிகாரி, பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிவான் குடியேற்ற அதிகாரியின் கருத்தை ஏற்று சம்பந்தப்பட்ட சட்டவிரோதக் குடியேற்றக்காரர் இருவரையும் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டார்.

(க-173)

### சமயச் சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள தமிழக அறிஞர், சேக்கிழார் அடிப்பொடி கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் பெருவாழ்வு' என்ற தலைப்பில் சமயசொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

சமய அபிமானிகள், மாணவர்கள் அனைவரையும் இந்தச் சொற்பொழிவில் கலந்துகொள்ளுமாறு சொற்பொழிவினை ஏற்பாடு செய்துள்ள யாழ். சைவபரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ-7-4)

★ ★ ★

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோயில் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தமிழக அறிஞர் சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன் 'உலகலாமுணர்ந்து ஓதுதற்கு அரியவன்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (க-173)

### இலவச கண் பரிசோதனை முகாம்

உரும்பிராய், இணுவில், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. இந்த மருத்துவமுகாமில் யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாஸன், விழிவெண்படல பரிசோதனையை மேற்கொள்வார்.

(ம-4)

### கிராம அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம்:

# கந்தரோடைப் பகுதி மக்கள் கண்டன மகஜர் கையளிப்பு

வலி.தெற்கு,ஒக்.10

சுன்னாகம் மேற்கு கிராம அலுவலர் மு.பாஸ்கரகுமார் அண்மையில் திருடர் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டது தொடர்பாக சுன்னாகம் மேற்கு, கந்தரோடை வாழ் மக்கள் அச்செயலைக் கண்டித்து காங்கேசன்துறை வீதியில் இருந்து வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் காரியாலயம் வரை ஊர்வலம் ஒன்றை கடந்த புதன்கிழமை நடத்தினர்.

ஊர்வலமாகச் சென்ற மக்கள் செயலக நிர்வாக அதிகாரியிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

சுன்னாகம் பிரதேச சபை (பட்டின சபை) 4ஆம் வட்டார அங்கத்தவர்கள் நூற்றுக்கணக்கானோர் கையெழுத்திட்ட இம்மகஜரை சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத் தலைவர் ந.அரசரத்தினம் நிர்வாக அதிகாரியிடம் அதனைச் சமர்ப்பித்தார்.

இப்பகுதிகளில் உள்ள முகாம்களில் வாழும் சில காடையர் கூட்டம் இப்பகுதியில் வாழும் மக்களின் வீடுகளில் புகுந்து களவுகள் எடுப்பதும், காடைத்தனம் புரிவதும் தாங்க முடியாத தொல்லைகளாகிவிட்டன. எமது கிராம சேவையாளரை இக்கோஷ்டியினர் பலமாகத் தாக்கியும் உள்ளனர். கிராம அலுவலரைத் தாக்கியவர்களை உடனடியாகப் பிடித்துத் தண்டனை வழங்கி எமது கிராமத்திலும், நாட்டிலும் களவுகள், காடைத்தனங்களை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அம்மகஜரில் மக்கள் கேட்டுள்ளார்கள்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலக நிர்வாக அதிகாரி, "பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர் தாக்கப்பட்ட செயலுக்கு நாம் உரிய நடவடிக்கை எடுப்போம். அரச அதிபரால் நியமிக்கப்பட்ட விழிப்புக்குழுவினரின் நடவடிக்கையைத் தடுக்க முற்பட்டது கண்டிக்கப்பட வேண்டியது. பிரதேச செயலர் மூலம் நாம் உரிய நடவடிக்கை மேற்கொள்வோம்" என அங்கு கூடிநின்ற மக்கள் மத்தியில் எடுத்துக் கூறினார்.

இதேவேளை -

கடமையில் ஈடுபட்டிருந்த சுன்னாகம் மேற்கு கிராம அலுவலர் மு.பாஸ்கரகுமார் தாக்கப்பட்டமை குறித்து வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

(க-152)

# குடிதண்ணீர் விநியோகம்; கட்டணம் அறவிட ஏற்பாடு

### பணம் செலுத்த இடங்களும் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பராமரிக்கப்படும் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களில் உள்ள நிலையான நீர்க்கம்பங்களின் பாவனையாளர்களிடமிருந்து மாதாந்தக் கட்டணம் அறவிடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் முகாமையாளர் எஸ்.ஜேசுதாஸன் அறிவித்துள்ளார்.

இதன்படி வேலணை நீர் விநியோகத் திட்டத்தால் பயன்பெறுவோர் இன்று புதன்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 3மணிவரை வேலணை பிரதேச செயலகத்திலும் -

கரவெட்டி நீர் விநியோகத் திட்டத்தால் பயன்பெறுவோர் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை அத்துளுவில் அமைந்துள்ள பம்பி இயக்கும் காரியாலயத்திலும் -

ஊர்காவற்றுறை நீர் விநியோகத் திட்டத்தால் பயன்பெறுவோர் எதிர்வரும் 5ஆம் திகதி ஊர்காவற்றுறை பிரதேச சபை நூலக மேல்மாடியிலும் -

கட்டணங்களைச் செலுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏனைய நீர் விநியோகத் திட்டங்களால் பயன்பெறுவோர் யாழ்.நாயன்மார்கட்டு அலுவலகத்தில் பணத்தைச் செலுத்தலாம்.

பணம் செலுத்தத் தவறுமிடத்து அடுத்த மாதம் 15ஆம் திகதியிலிருந்து நீரிணைப்புக்கள் துண்டிக்கப்படும் என்றும் முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

(க-9-4)

# சிறுவர்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பது தலையாய கடமை

### காரைநகர் நிகழ்வில் உதவி அரசாங்க அதிபர் உரை

காரைநகர்,ஒக்.10

சிறுவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்குவதும், அவர்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக்கொடுப்பதுமே எம் அனைவரதும் தலையாய கடமையாக இருக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஏற்பாடு செய்த சிறுவர்தின விழா, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே உதவி அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளை வழங்க மறுத்துவிடுகின்றனர். இத்தகைய சூழ்நிலைகள் எதிர்காலத்தில் தீய விளைவுகளையே ஏற்படுத்தும்.

சிறுவர்கள் சுயமாகச் சிந்திப்பதற்கும், தீர்மானங்களை எடுப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கவேண்டும். இவ்வாறான நிலையே வளம்மிக்க சந்ததியை உருவாக்கும்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 1998ஆம் ஆண்டு பிரதேச மட்டத்தில் சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் ஊடாக சிறுவர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி நான்கு, ஐந்து வருங்களாக பாடசாலை செல்லாது அகதிமுகாம்களில் வசித்துவந்த வறிய மாணவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்பதற்கான உரிய நடவடிக்கை எடுத்திருந்தோம். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அற்ற மாணவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுத்துள்ளோம் - என்றார்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தனது உரையில்:-

சிறுவர்கள்தான் உலகின் மிகப்பெரிய சொத்துக்கள் இவர்கள்தான் எதிர்காலத்தில் இந்த நாட்டையும், எமது கிராமங்களையும் நெறிப்படுத்துபவர்கள். இவர்களது உரிமைகளைப் பாதுகாத்து முழுமனதுடன் வளர்த்தெடுகக வேண்டியது எங்கள் அனைவரதும் கடமையாகும்.

தென்னிலங்கை மாணவர்களது கல்வி நிலையைவிட எமது பகுதி மாணவர்களின் கல்வி நிலை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. புதிய கல்விச் சீர்த்திருத்தத்தில் எல்லோர்க்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இவற்றைப் பயன்படுத்துவதில் நாம் பின்னிற்கின்றோம் ஆனால் தென்னிலங்கை மாணவர்கள் அதனைப் பயன்படுத்தி முன்னிலையில் திகழ்கின்றார்கள் - என்றார்.

(க-7-73)


## உலக உளநல நாள் - ஒக்ரோபர் 10

2001ஆம் ஆண்டின் கருப்பொருள்

*'வேலைப்பழுவும் உளநலனும்'*

வேலையாள்களுக்கு சிறந்த உள்நலம் இருந்தாலேயே உன்னத பொருளாதார இலக்கை அடையலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

சுவிஸ் நாட்டில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற, யாழ்.இந்து கௌரவக் குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, 34 வயதுடைய, செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அழகான, கவர்ச்சியான மணப்பெண் தேவை. ஜாதகக் குறிப்பு, உயரம், தோற்றம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு: விள.இல. 1369, மே/பா. உதயன். (93234)

## விற்பனைக்கு

றோணியோ இயந்திரம், Brother ரைப் ரைற்றர் (Portable) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.வாசன், ஜெட் மோட்டோர்ஸ் ஒழுங்கை, வைரவர் கோயிலடி, மயிலணி, சுன்னாகம். (93230)

நல்ல நிலையிலுள்ள 250 தகரக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.அப்புலிங்கம், 75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.(93201)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஒரு மாத பிறிமா சிவப்பு - கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வம், மங்கள மாளிகை, மாயக்கை, பருத்தித்துறை. (93114)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் சகல நிறைகளிலும் (பாதிக்கோழி உட்பட) சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 220/= மட்டுமே. தொடர்பு: 227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (93237)

புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(93182)

## வீடு விற்பனைக்கு

யாழ்.திருநெல்வேலி தெற்கு, மாரியம்மன் வீதியில் நான்கு பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதியுடனும் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கொழும்பு. T.P.No:553625. (C/18611)

## பொருளியல்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2000, 2001 வினாவிடைகள், வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், பணம், சர்வதேச வர்த்தகம்-வர்த்தக மாற்றுவீதம், நாணய மாற்றுவீதம், நடைமுறை விடயங்கள் ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (93224)

## தவறிவிட்டது

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த கந்தையா சுந்தரலிங்கம் என்பவரது விசேட அ.அட்டை (இல.907007177), தேசிய அ.அட்டை (இல.650083814V) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம் ஸ்ரேசன் வீதியிலுள்ள தம்பி பழக்கடையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (93227)

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி ரஜனா என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0902028336) மூன்று மாதங்களுக்கு முன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் CASIO, கல்வியங்காடு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(93197)

## வீடு வாடகைக்கு

இல.201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (அடைக்கல மாதா கோயிலுக்கு அண்மையில்) சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரசாங்கத் திணைக்களங்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மட்டும் நேரில் தொடர்பு கொள்ளவும். (93128)

## கொம்பியூட்டர் பிரத்தியேக வகுப்புகள்

அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழில்வாய்ப்புத் தேடுவோர்களுக்கு ஏற்ற முறையில் தனித் தனியாகக் கணனி கற்பிக்கப்படும். தனியே கொம்பியூட்டர் ரைப் செற்றிங் பழக விரும்புபவர்களும் வரலாம். கடிதத் தொடர்பு: A.ராகவன், 3ஆம் கட்டை, கல்வியங்காடு. (93198)

## வகுப்புகள்

அடுத்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகள் தனியாகவும், சிறு குழுவாகவும் கற்பிக்கப்படுகின்றன. கேதீஸ் மாஸ்ரர், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(93241)

---

### பிரிவுபசார வைபவம் தொடர்பான கலந்துரையாடல்

**இடம்:-** இராமநாதன் நுண்கலைத்துறை அறிமுறை மண்டபம்

**காலம்:-** நாளை(11-10-2001) வியாழன் முற்பகல் 10.00மணி

இராமநாதன் நுண்கலைத்துறை 4ஆம் வருட (சென்ற கல்வியாண்டு) மாணவர்களுக்கு நடைபெறவிருக்கும் பிரிவுபசார வைபவம் சம்பந்தமான கலந்துரையாடல் ஆதலால், அனைத்து 3ஆம், 4ஆம் ஆண்டு மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள். (இறுதியாண்டு மாணவர்களுக்கும் அழைப்பிதழ் வழங்கப்படும்)

*யாழ்.பல்கலைக்கழகம்.* (93245) *3ஆம் வருட மாணவர் பிரதிநிதி.*

---

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

மாணவி

**செல்வி**

**சுஜாதா குணபாலசிங்கம்**

2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவருக்குக் கல்வி அறிவு புகட்டி நெறிப்படுத்திய ஆசிரியை **செல்வி மாலதி** அவர்களுக்கும் மற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (93235)

திரு.குணபாலசிங்கம்,
திருமதி கு.இதயராணி
குடும்பத்தினர்.

---

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களான எமது கல்வி நிலைய மாணவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1) ஸ்ரீ.ரஜீபவன் | - 157 | 12) இ.பாமா | - 129 |
| 2) ச.சபேசன் | - 150 | 13) செ.நிறோஷன் | - 129 |
| 3) கே.ஹேமா சிந்துஜா | - 147 | 14) ந.விஷ்ணுகாந் | - 129 |
| 4) அ.நிரூபன் | - 138 | 15) அ.ஜீவராஜ் | - 128 |
| 5) ஆ.சஞ்ஜியா | - 138 | 16) சி.அஜந்தினி | - 126 |
| 6) சி.சிவாஸ்கர் | - 136 | 17) பு.ராஜாராம் | - 125 |
| 7) சி.சிறிரஞ்சன் | - 136 | 18) ஆ.கரிகாலன் | - 124 |
| 8) தி.ஜெகத் | - 135 | 19) த.ஹரிவர்மன் | - 123 |
| 9) பி.யாசினி | - 132 | 20) வி.மிதிலா | - 121 |
| 10) ஜெ.ஜெயசுகந்தினி | - 131 | 21) ச.அகிலன் | - 121 |
| 11) ம.மாதங்கி | - 129 | 22) க.வளர்மதி | - 120 |

*23) வ.கோபிகா - 132*

மேலும் அண்மித்த புள்ளிகளைப் பெற்ற
*க.கபிலன் - 117* *ந.சாளினி - 117*

ஆகியோரையும் சிறந்த பெறுபேறு பெறுவதற்கு அரும்பணியாற்றிய எமது கல்வி நிலைய ஆசிரியர்களையும் நன்றி தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- நிர்வாகி
டால்ரன் கல்வி நிலையம்,
துன்னாலை.

(C/18611)

---

### வாழ்த்தும் இறை ஆசியும்

யாழ்.புனிதர் ஜோண் பொஸ்கோ
பாடசாலை மாணவி

**செல்வி தர்மராஜா லோகனா**



2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவருடைய வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், ரியூசன் ஆசிரியர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்க இறை ஆசியை வேண்டிநிற்கின்றோம்.

*பில்லேன்,*
*உரும்பிராய் தெற்கு.*
(93240)

இவரை வாழ்த்திப் பாராட்டுவோர்:
கெங்காதரன் - லீலாவதி தம்பதியினர்.
(மாமா - அத்தை)

---

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

06-10-2001 அன்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் முதுமெய்யியல்மாணிப் பட்டம் பெற்ற

**திரு.திருநாவுக்கரசு வேல்நம்பி** B.com.(Hons)

*(விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)*

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

*"சுஸ்வரவாசம்"*
*மயிலணி,*
*சுன்னாகம்.*
(93233)

திரு.க.சின்னராசா
குடும்பத்தினர்.

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தறிக்கப்பட்ட வேம்பு/மா/மலைவேம்பு/தேக்கு மரங்களின் அடிப்பாகங்களும் கிளைகளும் மற்றும் விறகுக்கான கொப்புகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

*நாள்:* 17.10.2001 புதன்கிழமை

*நேரம்:* முற்பகல் 10.30 மணி

*இடம்:* **யாழ்.பல்கலைக்கழக பிரதான வளாகம்.**

ஏலவிற்பனைக்குரிய மரங்களைப் பார்வையிட விரும்புவோர் 12, 15, 16ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் உதவி நிதியாளர் வழங்கலுடன் தொடர்புகொண்டு பார்வையிட முடியும்.

ஏலத்தில் வெற்றிபெறுபவர் அதற்கான முழுப்பணத்தையும் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும். மரங்களை அன்றைய தினமே எடுத்துச் செல்லலாம். கால அவகாசம் தேவைப்படின் உதவி நிதியாளர் வழங்கலுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (C/18612)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
15 - 09 - 1914



மறைவு
10 - 09 - 2001

### திருமதி இராசரத்தினம் அன்னமுத்து

மாதம் ஒன்று ஆனதம்மா
மறக்கவில்லை உங்கள் முகம்!
திங்கள் ஒன்று சென்று விட்டதம்மா
தீரவில்லை எம் துயர்!
பெற்ற எம்மைத் தவிக்கவிட்டுப்
பிரிந்து நீங்கள் சென்றதேனோ?
மலர்ந்த உங்கள் முகத்தைக் காணா
மனந்துடிக்கும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
வருந்தியழுகின்றார்கள் அம்மா!....
எம்மனதை விட்டு அகலாதம்மா
என்றும் உங்கள் அழகுமுகம்....

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உற்ற துன்பத்தில் கலந்தவர்களுக்கும், தொலைபேசியிலும், கடித மூலமும் அனுதாபச் செய்திகள் தெரிவித்து எமது துயரில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்று (10.10.2001) புதன்கிழமை பிறவுண் வீதியில் உள்ள எமது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சிவா மில்'
*46/1,பிறவுண் வீதி,*
*4ஆம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (92920)

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

---

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்கள
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு.வே.தி.செல்வரத்தினம்**

அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி திருப்பதி முத்து** அவர்கள்

காலஞ்சென்ற செய்திகேட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
*யா/அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை,*
*யா/உடுத்துறை மகா வித்தியாலயம்.*

(C/18609)

## யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி
## தரம் 6 அனுமதி-2002

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 2002 இல் தரம் 6 க்கு அனுமதி பெற விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய படிவத்தினை காரியாலயத்தில் பெற்று 30-10-2001க்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்
## கேம்பிரிஜ் கல்வி நிலையம்

பிரதான வீதி, சங்கானை.

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்றுத் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான,

| | | |
|---|---|---|
| ரா. அருண்ஜன் | 139 | புள்ளிகள் |
| செ. கஜீபன் | 133 | ,, |
| சௌ. றெமிங்டன் | 125 | ,, |
| உ. நிதர்சா | 124 | ,, |
| ர. ஜெனிஸ்ரன் | 119 | ,, |

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

(93271)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா / கரந்தன்
### இராமுப்பிள்ளை வித்தியாலயம்
நீர்வேலி.

2001 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்கள்

| | | |
|---|---|---|
| நா. கௌரிதாஸ் | — | 145 |
| கா. கிருபாலிகன் | — | 139 |
| சி. அஜந்தன் | — | 134 |
| பூ. யசிந்தன் | — | 131 |
| க. கீதாஞ்சலி | — | 129 |
| த. கார்த்திகன் | — | 126 |
| ஞா. பிரதீபராஜ் | — | 123 |
| பா. பிரதீப் | — | 123 |
| ம. தினேஷ் | — | 122 |
| க. தனுசன் | — | 122 |

ஆகியோரையும் மற்றும் 100 — 117 புள்ளிகளைப் பெற்ற ஒன்பது (9) மாணவச் செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/18630)



## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு, பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவரும், வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும், சமூகசேவையாளருமாகிய

### கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவுச்செய்தியறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் புங்குடுதீவு சர்வோதய சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விவசாயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(93256)



## மரண அறிவித்தல்
### வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

ஆத்தியடி புலோலியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (09-10-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, அன்னபூரணியின் ஏக புத்திரனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலேஸ்வரி, பவானி, பாலராணி, பாலரஞ்சனி, பாலேஸ்வரன், பாலநந்தன், பாலநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பேராசிரியர் ஞானகுமாரன், சிவகுமார், சூரியபவா, தோமஸ் விற்லி, கல்பனா, சுந்தரவதனி ஆகியோரின் மாமனாரும் செல்வநந்தினி, கார்த்திகேயன், தனஞ்செயன், சிவதாசினி, பவாநிஷாந்தன், அஞ்சலா, பிரசன்னா, பவதாரணி, பாவதாருணி, பாலசங்கர் ஆகியோரின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
35/1 குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
நா. ஞானகுமாரன் (மருமகன்)

(93257)


## கணனிக் கற்கை இன்று ஆரம்பம்

கொக்குவில் இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் கணனிக் கற்கை இன்று முதல் நடைபெறவுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியூடாக 1999, 2000ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே விண்ணப்பிக்கலாம். இக் கற்கைநெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரிக்குச் சமுகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (க-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி—யாழ். கன்னியர் மடம் ம. வி. எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

★ மாலை 4.45 மணி — யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சென் ஜோன்ஸ் கல்லூரி.

★ ★ ★

வலிகாமம் வலய சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

### 14 வயதுப் பிரிவு

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ. க. பாடசாலை.

### 16 வயதுப் பிரிவு

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

### 18 வயதுப் பிரிவு

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (க-86-45)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெறும் 16 வயதுப் பிரிவுக்கான ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ இறுதி ஆட்டம்—உரும்பிராய் இந்து எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தி.

★ 3 ஆம் இடத்துக்கான ஆட்டம்—அத்தியார் இந்து எதிர் சோமஸ்கந்தா. (க-3)

★ ★ ★

நல்லூர் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

★ இறுதியாட்டம்— புனித யோசப் வித்தி எதிர் புனித ஜேம்ஸ் வித்தி.

★ 3 ஆம் இடத்துக்கான ஆட்டம்— நாவாந்துறை றோ. க. எதிர் புனித சாள்ஸ் ம. வி.

### 18 வயதுப் பிரிவு

★ இறுதியாட்டம்— புனித ஜேம்ஸ் ம. வி எதிர் புனித யோசப் வித்தி.

★ 3 ஆம் இடத்துக்கான ஆட்டம்—யாழ். மத்திய கல்லூரி எதிர் புனித சாள்ஸ் ம. வி. (க-3)

## இளைஞர் சேவை மன்றத்தின் பயிற்சி நெறிகள் ஸ்தம்பிதம்.

யாழ்ப்பாணம், ஒக். 10

தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்டப் பணிமனைக்கு அதன் பயிற்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி கிடைக்காமையால் அதன் பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் இளைஞர் — யுவதிகளுக்குக் கணனிப்பயிற்சி, தையற் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சி நெறிகளை நடத்துவதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள இளைஞர் விவகாரப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

ஆறு லட்சம் ரூபா நிதி இத் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது

இந்த நிதியை இதுவரை வடக்கு—கிழக்கு மாகாண கல்வி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு தமக்கு அனுப்பி வைக்கவில்லை என்று யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றப் பணிமனை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இதே வேளை —மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களின் தேசிய இளைஞர் சேவை மன்றப் பணிமனைகளுக்கு இதற்கான நிதி ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சினால் வழங்கப்படும் நிதி உதவிகளும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் யாழ். மாவட்டத்தில் இளைஞர்—யுவதிகளுக்குச் சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கெனத் திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி வகுப்புகளை நடத்த முடியாது இருப்பதாக யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளனம் விசனம் தெரிவித்துள்ளது. (க-135)


## உளங்கனிந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

2001 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து காசிநாதர் வித்தியாலயத்திற்குப் பெருமை தேடித்தந்த மாணவமணிகள்.

| | பெயர்கள் | | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | செல்வி சிவசேகரம் மெச்சிபாரதா | - | 154 |
| 2. | செல்வி ஆனந்தமூர்த்தி சஞ்ஜியா | – | 138 |
| 3. | செல்வன் நவரத்தினசாமி விஷ்ணுகாந்த் | - | 129 |
| 4. | செல்வி மயில்வாகனம் மாதங்கி | - | 129 |
| 5. | செல்வி சிவலோகநாதன் அயந்தினி | - | 126 |
| 6. | செல்வன் புருஷோத்தமக்குரு ராஜாராம் | - | 125 |
| 7. | செல்வன் தர்மகுலசிங்கம் ஹரிவர்மன் | – | 123 |
| 8. | செல்வன் சத்தியகுமார் அகிலன் | – | 121 |
| 9. | விக்கினேஸ்வரன் மிதுபா | – | 121 |

ஆகியோரையும் இம் மாணவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் உள்ளன்புடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பெற்றோர்கள்

யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
கரவெட்டி.

(சி/18620)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

காரைநகர் யா/வலந்தலை வடக்கு அ. மி. த. க. பாடசாலையில் இருந்து 2001 ஆம் ஆண்டின் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

செல்வி கதிர்காமத்தம்பி விஜி - 138 புள்ளிகள்

செல்வன் நற்குணராசா புஷ்பமேனன் - 137 புள்ளிகள்

இவர்களையும், இவர்களை நெறிப்படுத்தி ஊக்குவித்த அதிபர் திருமதி த. நாகரத்தினம் அவர்களையும் ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கலைவாணி சனசமூக நிலைய இளைஞர்கள்

சடையாளி,
காரைநகர்.

(சி/18631)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 06-10-2001 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற பகுதிநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் விசேட சித்திபெற்ற எமது கல்லூரி ஆசிரியைகளான:

செல்வி கேதீஸ்வரி ஆறுமுகம்
திருமதி வசந்தாதேவி கனகேந்திரன்
ஆகியோரையும்

வெளிவாரிப் பிரிவில் கலைமாணிப் பட்டம் பெற்ற எமது கல்லூரி ஆசிரியை

திருமதி நந்தினி சிவராஜன் அவர்களையும்

தொண்டர் ஆசிரியை

செல்வி நிர்மினி இராசேந்திரம் அவர்களையும்

பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம். இவர்களுடன் தரம் 5 இல் சித்தியடைந்த 9 மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(சி/18623)

## நிவாரணம் பெறுவோர் விவரம் திரட்டு

தென்மராட்சி,ஒக்.10

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெறுவோரின் விவரங்கள் அந்தந்தப் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தித் தொண்டர்கள் ஆகியோரால் நேற்றுமுன்தினம் தொடக்கம் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் நிவாரணம் பெறத் தகைமையுடைய பலருக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என பிரதேச செயலருக்கு முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து இந்த விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் -

பிரதேசத்தின் 10 ஆயிரத்து 846 குடும்பங்கள் நிவாரண உதவி பெற்று வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நிவாரணம் பெறுவதற்குத் தகைமையுள்ளவர்களின் விவரங்களும் திரட்டப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

(ம-117)

## சுகாதாரத் தொண்டர்களுக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம்.ஒக்.10

யாழ்மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கான கொடுப்பனவு இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

(ம-ரி)

## சிந்துநடைக் கூத்து

யாழ்ப்பாணம்.ஒக்.10

அளவெட்டி, பாரதி சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்காக திரு. இராஜகுமாரின் நெறியாள்கையில் அளவையூர் இளைஞர், யுவதிகள் பங்கேற்கும் 'காத்தவராசன்' சிந்து நடைக்கூத்து நாளை வியாழக்கிழமை இரவு 7மணிக்கு கும்பலை, அளவெட்டி கிழக்கு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ம-ரி)

## மாணவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.10

தெல்லிப்பழை, யூனியன் கல்லூரியின் மாணவன் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, சித்தியம் புளியடியைச் சேர்ந்த கதிரவேல் பாலகிருஸ்ணா (வயது 20) என்ற, யூனியன் கல்லூரியில், ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில், விஞ்ஞானப் பிரிவில் கல்விகற்கும் மாணவனே காணாமற் போனவராவார்.

கடந்த 3ஆம் திகதி வீட்டில் இருந்த சமயம் இவர் காணாமற் போய்விட்டதாக அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)

## அனுமதியின்றி கட்டடம் அமைக்க தடை!

வலி.தென்மேற்கு,ஒக்.10

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் அனுமதியின்றி கட்டடங்கள் அமைத்தால் அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபை எல்லைக்குள் அனுமதியின்றி கடைகளோ, வீடுகளோ கட்ட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

இதற்கென பிரதேச சபைச் சட்டத்தின் கீழுள்ள பொருத்தமான விண்ணப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிப்பவர்களுக்கே கட்டடம் அமைக்க அனுமதி அளிக்கப்படும் என்றும் -

அவர் மேலும் கூறியுள்ளார்.

(ம-185)


**மருத்தெண்ணெய் விநியோகம்**

சில்லாலை Dr.அல்போன்ஸஸ் அதனாசியாரின் நேரடிக் கண்காணிப்பில் தயாரிக்கப்பட்ட மருத்தெண்ணெய் வகைகளைக் கீழ்க் காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி கமலினி ரஞ்சன்
இல.22, கலைமணி வீதி,
(அம்மன் கோயில் வீதி)
கட்டப்பிராய்.
(93229)



**நன்றியோடு பாராட்டுகின்றோம்**

யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்ப பாடசாலை மாணவன்

**செல்வன் நந்தகுமார் கோபிநாத்**



2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 127 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை வாழ்த்துவதோடு, அவரை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கும், சுப்ரா கல்வி நிறுவனத்துக்கும், செல்வி வி.சாந்தி அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தந்தை, தாய், ஜனா,
சம்போ, அம்மம்மா,
குலசந்திரன் குடும்பம் (லண்டன்),
மணி குடும்பம் (லண்டன்),
சுரேஸ் குடும்பம் (கொழும்பு).

K.J.Communication,
Sithankerny.
(93244)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்

**செல்வன் வரதராசன் தயாதீசன்**



2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவருக்கு கல்வி அறிவு புகட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும், ரியூசன் ஆசிரியர் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

42, B.A. தம்பி லேன், வண்ணார்பண்ணை. (93251)
அப்பா, அம்மா, அண்ணன்மார், தங்கைமார்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலையில் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**இராமகிருஷ்ணமூர்த்தி கார்த்தீபன்**

அவர்களையும் அவருக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலைப் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்கக் கணனிப் பிரிவு விரிவுரையாளருமான

**திரு.வல்லிபுரம் சசிகுமார்**

அவர்கள் 06.10.2001 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கணனிப் பிரிவு மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்
யா/இடைக்காடு மகா வித்தியாலயம்.
(93231)



**மாருதியின் நெஞ்சினை நெருடும் ஓராண்டு அஞ்சலி**



செல்வன்
**விஸ்வலிங்கம் யோசப் ரஞ்சித்குமார்**
(ரஞ்சித்)

தோற்றம்: 20.09.1978 மறைவு: 10.10.2000

அன்போடு பழகி ஆசையுடன் உறவாடி விட்டு
நெஞ்சோடு நினைவை மட்டும் வைத்துச் சென்றனையே?
சிரித்த முகத்துடன் வலம்வரும் உன்னை மறக்க முடியவில்லையே!
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

இல.1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (C/18618)
உரிமையாளரும், ஊழியர்களும்,
மாருதி ரெக்ஸ்.



**முதலாம் வருட நினைவலைகள்**

பூவுலகில் 05 - 08 - 1921



புகழுலகில் 11 - 10 - 2000

**அமரர் டானியல் முருகேசு வேதநாயகம்**

(இளைப்பாறிய மேற்பார்வையாளர் - யாழ். போதனா வைத்தியசாலை.)

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எமக்கெல்லாம் அன்புகாட்டி வளர்த்த எங்கள் ஐயாவை
முதலாம் வருடத்தில் நினைவு கூருகிறோம்.

வதிரி, கரவெட்டி. (93255) - குடும்பத்தினர்.


## சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல் - 2001-10-20

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20-02இன்படி என்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இச்சங்கத்தின் எல்லாக் கிளைகளினதும் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 09 இற்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆகவே தயவுசெய்து கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் யாவரும் அந்தந்தக் கிளைகளின் கிளைப்பொதுச் சபைக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளித்து கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம்: 2001-10-20 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி.**

**கூட்டம் நடைபெறும் இடங்கள் - விவரம் கீழ்வருமாறு:**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் | |
|---|---|---|---|---|---|
| 01 | 184<br>184 | நாவற்குழி கொள்வனவு நிலையம்<br>நாவற்குழி விற்பனை நிலையம் | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. தா. செல்வசோதி | கூ. பரிசோதகா |
| 02 | 185 | தச்சன் தோப்பு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. ஆர். புவன்ராஜ் | கூ. பரிசோதகர் |
| 03 | 186 | தனங்களப்பு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. பொ. மோகன் | கூ. பரிசோதகர் |
| 04 | 187 | மறவன்புலோ | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. ஆ. நாகலிங்கம் | கூ. பரிசோதகர் |
| 05 | 188 | கைதடிச் சந்தி | கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | திரு. பொ. சிவலிங்கம் | மா. கூ. அ. அலுவலர் |
| 06 | 189 | கைதடி மேற்கு | கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | திரு. தா. தவநாதன் | கூ. பரிசோதகர் |
| 07 | 191 | கைதடி நுணாவில் | கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம | திரு. கி. குமரகுருலிங்கம் | க. கா. பரிசோதகர் |
| 08 | 190<br>204 | கைதடி வடக்கு<br>கைதடி மத்தி | கைதடி மத்தி வளர்மதி ச. ச. நிலையம் | திரு. சு. கணேசு | கூ. பரிசோதகா |
| 09 | 192 | மகிழடி (மட்டுவில் தெற்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திருமதி' க. இந்திராணி | மா. கூ. அ. அலுவலர் |
| 10 | 193 | முசுறி (சந்திரபுரம்) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. எஸ். திருச்செல்வம் | கூ. பரிசோதகர் |
| 11 | 194 | மானாவளை (மட்டுவில் வடக்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. வை. கைலைநாதன் | கூ. பரிசோதகர் |
| 12 | 195 | ஏற்றம் (நுணாவில் கிழக்கு மேற்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | செல்வி இ. இராசரத்தினம் | மா. கூ. அ. அலுவலர் |
| 13 | 196<br>198 | நாவற் பள்ளம்<br>பெருங்குளம் (சாவகச்சேரி வடக்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திருமதி யோ. செல்வரட்ணம் | மா. கூ. அ. அலுவலர் |
| 14 | 197 | சாவகச்சேரி தெற்கு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. இ. விஜயமோகனராசா | கூ. பரிசோதகர் |
| 15 | 200 | சரசாலை வடக்கு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. கே. அருந்தவநாதன் | கூ. பரிசோதகர் |
| 16 | 201 | வேம்பிராய்ச் சந்தி | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. பொ. மகேஸ்வரன் | கூ. பரிசோதகர் |
| 17 | 202 | சிக்னல் (மீசாலை வடக்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. எம். எஸ். சண்முகநாதன் | கூ. பரிசோதகர் |
| 18 | 203 | மீசாலை தெற்கு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. ஐ. நாகேஸ்வரன் | கூ. பரிசோதகர் |
| 19 | 206 | கச்சாய் வீதி | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. க. சின்னராசா | கூ. பரிசோதகர் |

சு.கணேசமூர்த்தி
கூ.அ.உ.ஆணையாளர் (ப.தெ.), யாழ்ப்பாணம்.

(C/18614)

## பாராட்டி வாழ்த்துவதுடன் நன்றி கூறுகின்றோம்

யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்

செல்வன் முருகானந்த சர்மா நவநீத சர்மா

(164 புள்ளி)



*2001 ம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில 4ஆம் இடத்தையும் யாழ். மாவட்டத்தில் 11ஆம் இடத்தினையும் பெற்றதையிட்டு இவரின் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், வகுப்பாசிரியை மற்றும் ரியூசன் ஆசிரியை, நாவலர் கல்வி நிறுவனத்தினருக்கும் எமது மனமார்நத நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இவர் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்க மங்கள மகாகாளி அம்பாளின் அருளும் நல்லைக் குருமணியின் ஆசியும் வேண்டி நிற்கின்றோம்.*

*165, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வீணா விஹார் சகோதரிகள்,
தங்கை பவித்ரா.

(93268)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 07 - 1932



மறைவு 20 - 09 - 2000

## அமரர் கந்தையா சிவப்பிரகாசம்

*திதி:- 10-10-2001*

ஐயா என்று நாம் அழைக்க
அன்புடன் எமை அணைத்த ஐயாவே!
உங்கள் இறுதிக் காலத்தில் இக்கதி வரும் என நாம்
கனவில் கூட நினைக்கவில்லை ஐயா!
ஓராண்டு இல்லை பல்லாண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயர் ஐயா!

*123/2, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(93260)

## நவக்கிரஹ ஹோமம்

உலகில் சாந்தி, சமாதானம் வேண்டி கோண்டாவில் நெட்டிலிப் பாய்ப் பிள்ளையார் கோயிலில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நவக்கிரஹ ஹோமம் இடம்பெறவுள்ளது. (க-152)

உசன் O/L மாணவர்களுக்கு!

**செய்முறைப் பரீட்சை**

சங்கீதம், மனையியல், விவசாயம்.

நாள்:- 12.10.2001 வெள்ளி
இடம்:- யங்றோயல்-நெல்லியடி.
நேரம்:- காலை 9.00 மணி.

அதிபர்
*யா/உசன் இராமநாதன் ம.வி.*
*உசன், மிருசுவில்.*

**லஷ்சுமி** இணுவில்.

சரத்குமார், நக்மா, கவுண்டமணி
நடித்த
**ரகசிய பொலீஸ்**
*(ரீல்ஸ்)*
தினசரி: 10.30, 2.30 (பழைய நேரம்)
(93272)

**ராஜா** யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன்
நடித்த
**ப்ரியமானவளே**
தினசரி: 10.30, 2.30 (பு.நே.)
*சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00 (பு.நே.)*
(C/18457)

**நாகம்ஸ்** கன்னாகம்

*சரத்குமார், தேவயானி, விக்ரம் நடித்த*
**விண்ணுக்கும் மண்ணுக்கும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(93250)

"உம்முடைய காருண்யம் என்னைப் பெரியவனாக்கும்"
சங். 18:35

## மேஷாக் றெக்கோடிங் and போட்டோ

இன்று மகிழ்ச்சிகரமான ஆரம்பம்,
மேஷாக் றெக்கோடிங் and போட்டோ

- உங்கள் இல்லங்களில் எப்பொழுதும் ஒலிக்கும் பழைய/புதிய கிறிஸ்தவ கீதங்களை சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்துகொள்ளவும்
- காலத்தால் அழியாத கண்கவர் புகைப்படப் பிடிப்புகளுக்கும
- பத்திரப்படுத்த வேண்டிய ஆவணங்கள் எதுவானாலும் சிறந்த முறையில் பொலித்தீன் கவரிட்டுக் கொள்ளவும (LAMINATING)
- தாமதமின்றி தரமான போட்டோப் பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும் (PHOTO COPY)
- மற்றும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய கிறிஸ்தவப் பாடல் கெசற்கள்.

வாசிப்பவர்களின் வாழ்வை வளமாக்கும் கிறிஸ்தவ புத்தகங்கள்.
அழகான ஸ்ரிக்கர்கள் அனைத்தையும் ஒரே இடத்தில்
கவர்ச்சிகரமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்:

(93247)

**மேஷாக் றெக்கோடிங் AND போட்டோ**
*இல. 162, முதலாம் குறுக்குத் தெரு (வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக) யாழ்ப்பாணம்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/தர்மக்கேணி
அ.த.க.பாடசாலை மாணவன்

**செல்வன்**
**தனபாலசிங்கம் தர்ஷிகன்**

அவர்கள் 2001 ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், முதன்மை நிலைகளில் கல்வியூட்டிய கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் தற்காலிகமாகக் கல்வி கற்க அனுமதி வழங்கி கல்வி புகட்டிய யா/ கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வாழ்த்துவோர்:-*
த.குலதீபன்,
த.மஜதீபன்,
(அண்ணன்மார்)

*லண்டன்.*

(93258)

## மக்கள் வங்கியின் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு

## வனிதா வாசனா - 2001

- ரூபா 2,670,000/- பெறுமதியான மாபெரும் பரிசுக் குவியலை மகளிருக்கென்றே அள்ளித் தருகின்றது.
- 01.11.2001 - 31.01.2002 வரை ரூபா 7,500/- அல்லது அதற்கு மேல் மீதியுள்ள மகளிர் அதிர்ஷ்டக் கணக்குகள் அனைத்தும் பரிசுச் சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்.
- ★ரூபா 7,500/- இற்கும் மேற்பட்ட ஒவ்வொரு 7,500/-- இற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.
- 12 மாதங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ரூபா 25,000/-- அல்லது அதற்கு மேல் மீதியைப் பேணும் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு வைத்திருப்போருக்கு ரூபா 300,000/- பெறுமதியான காப்புறுதி வசதி கிடைக்கும்.
- இக்கணக்கை ஒரு சேமிப்புக் கணக்குப் போன்று நடைமுறைப்படுத்தலாம்.
- கணக்கிலுள்ள மீதிக்கு வட்டி வழங்கப்படும்.

★விசேட கடன் திட்டம் இதற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் பரிசு:- ரூபா 750,000/- பெறுமதியான மாருதி கார்.
24பரிசில்கள் :- ரூபா 32,000/- பெறுமதியான குளிர்சாதனப் பெட்டிகள்.
24பரிசில்கள் :- ரூபா 18,000/- பெறுமதியான மைக்கிறோ வேவ் ஓவன்கள்
240பரிசில்கள் :- ரூபா 7,000/- பெறுமதியான தங்க நாணயங்கள்

பெண்களே! உங்கள் பெயரில் ஏற்கனவே மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு இருக்குமாயின் அதன் மீதி ஏற்றதாக உள்ளதா எனக் கவனித்து ஏற்ற தொகையைச் சேமியுங்கள். இல்லாவிடில் அருகிலுள்ள **மக்கள் வங்கிக் கிளையில் வனிதா வாசனா** கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

## மக்கள் மனமறிந்த வங்கி

## மக்கள் வங்கி

(C-18628)

# ஆப்கான் மீதான வான் தாக்குதல்கள் நேற்று மூன்றாம் நாளாக தொடர்ந்தன

## காபூலுக்கு அருகே ஐ.நா. அலுவலகமும் தகர்ந்தது

லண்டன்,ஒக்.10

ஆப்கான் மீதான அமெரிக்க - பிரிட்டன் படைகளின் வான் தாக்குதல்கள் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தன.

காபூலுக்கு அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் நிலக்கண்ணி மற்றும் மிதிவெடிகளைச் செயலிழக்கச் செய்யும் ஐநா.அலுவலகம் ஒன்று தகர்ந்தது. அதிலிருந்த நான்கு ஊழியர்கள் பலியானார்கள்; மற்றொருவர் காயமடைந்தார்.

உலகில் அதிகளவில் நிலக்கண்ணி மற்றும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் நாடாகக் கருதப்படும் ஆப்கானிஸ்தானில் ஐநா.நிதியுதவியுடன் கண்ணிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் - ஆப்கான் டெக்னிக்கல் கன்ஸல்ட்டன்ஸி என்ற - நிறுவனத்தின் அலுவலகமே ஏவுகணைத் தாக்குதலில் தகர்ந்தது.

அதில் கட்டடத்தோடு நசியுண்டு இறந்துபோன நான்கு ஊழியர்களின் சடலங்களை மீட்கும் பணி நேற்று இடம்பெற்றது.

காபூல், கந்தகார், ஜலலாபாத், மாஸர் - இ - ஷெரீப்,, கொண்டுங் ஆகிய நகரங்கள் மீது நேற்று பகலிலும் இரவிலும் தொடந்து வான் வழித் தாக்குதல்கள் நடந்தவண்ணம் இருந்தன.

இதுவரை நாற்பது பொதுமக்கள் வரை உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

ஆப்கானில் இராணுவ, எரிபொருள் சேகரிப்பு நிலைய இலக்குகள் மட்டுமே தாக்கப்பட்டு வருவதாக அமெரிக்கா அறிவித்தது. (உ)

# அமெரிக்கா இனிப் பாதுகாப்பை கனவிலும் நினைக்க முடியாது

## பின்லேடன் எச்சரிக்கை

டோகா,ஒக்.10

உலகில் இஸ்லாமியர்கள் உறுதியாக, பாதுகாப்பாக உணரும்வரை, அமெரிக்கா பாதுகாப்பு என்பதன் சுவையை இனிமேல் கனவில் கூடக் காணமுடியாது என்று ஒஸாமா பின்லேடன் எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் தொடங்கிய சில மணித்தியாலங்களில் கட்டார் அல் - ஜஸீரா தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்பிய பின்லேடனின் உரையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

தற்போதைய சம்பவங்கள் உலகை நம்பிக்கை, அவநம்பிக்கை என்ற இரு முகாம்களாக்கியுள்ளதாகவும் -

இஸ்லாமியர்கள் பல ஆண்டுகளாக அனுபவித்த அமெரிக்க அச்சுறுத்தலை தற்போது அமெரிக்கர்கள் அனுபவிப்பதாகவும் - ஆப்கானிஸ்தான் மற்றும் பலஸ்தீனம் ஆகியவற்றில் அமைதி நிலவும்வரை அமெரிக்கா பாதுகாப்பு என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளப் போவதில்லை என்றும் - பின்லேடன் மேலும் கூறினார்.

தனது தளபதிகளில் ஒருவரான அய்மன் அல - சவாகிரி அருகிலிருக்க, மலைப்பாங்கான இடமொன்றில் ஆப்கானிஸ்தானிய இராணுவச் சீருடையுடன் தொலைக்காட்சியில் பின்லேடன் தோன்றினார். (ஒ-4)

# அமெரிக்காவின் தாக்குதல் வேறு நாடுகளுக்கும் விஸ்தரிப்பு?

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை வேறு நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர், ஐநா.பாதுகாப்புச்சபைக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த எச்சரிக்கை விடப்பட்டது.

ஒஸாமா பின்லேடன் மற்றும் அவரது அல்கெய்டா அமைப்பு உள்ள ஆப்கானிஸ்தானில் மட்டுமன்றி பயங்கரவாதத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கை வேறு நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படுமென்றும்-

அமெரிக்காவின் தற்பாதுகாப்புக்காக இந்த விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படவிருப்பதாகவும்-

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இராணுவ நடவடிக்கை விஸ்தரிக்கப்பட உள்ள நாடுகள் குறித்து அக்கடிதத்தில் அடையாளம் காட்டப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ-4)

**விற்பனைக்கு**

ஓடியோ CD கள
பழையதும் புதியதும்
விற்பனைக்கு உண்டு.
250/= ரூபா மட்டுமே!

**K.J. COMMUNICATION**
070-212474
வட்டு.வடக்கு, சித்தன்கேணி.
(93246)

**கணக்கீடு**

**A/L 2003**
தொங்கல் கணக்கு
ஆசிரியர்:- S.தவா
B.Com. (Hons) [Acc.Spl]
ஆரம்பம்:- வியாழன் 4.00 p.m.

**SHAMROCK**
Temple Road, Jaffna.
(93270)

## நெஞ்சினை நெகிழவைக்கும் நாலாவது ஆண்டு நினைவுத் துளிகள்...!

மலர்வு: 28 ☆ 02 ☆ 1928



உதிர்வு: 10 ☆ 10 ☆ 1997

அமரர்

அருள்மிகு அறிவர் **டி.ஜே.அம்பலவாணர்** அவர்கள்

*(தென்இந்திய திருச்சபை: யாழ்.திருமண்டலத்தின் 2ஆம் பேராயர்)*

"என் நெஞ்சே!
நீ நம்பிக்கை இழப்பது ஏன்?
நீ கலக்கமுறுவது ஏன்?
கடவுளையே நம்பியிரு
என் மீட்பராம் கடவுளை
இன்னும் நான் போற்றுவேன."
(சங்கீதம்:42:11.)

என்றும் எம்மனதை விட்டகலாத
உம் அன்பு நிறைந்த
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

*மிஷன் இல்லம்,*
*மானிப்பாய்.*
(92850)

## கொழும்பில் கூட்டம்

### ஆப்கான் மீதான தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் கூட்டம்

கொழும்பு,ஒக்.10

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா ஆரம்பித்திருக்கும் கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து இன்று புதன்கிழமை முஸ்லிம் தேசிய ஐக்கிய முன்னணி கொழும்பில் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

கொம்பனித்தெரு பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டம் இடம்பெறும். (க-4-ரி)

### அதிருப்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புச் செய்தியாளர் ஒருவா குறிப்பிட்டார்.

அரசுத் தரப்பின் அதிருப்திக் குழுத் தலைவர்களான எஸ்.பி.திஸநாயக்கா, ஜி.எல்.பீரிஸ், மஹிந்த விஜேசேகர, டலஸ் அழகப்பெருமா, நந்திமித்ர எக்கநாயக்கா, விஜித்த முனி சொய்ஸா ஆகியோர் உட்பட பல எம்.பிக்கள் இன்று கட்சி மாறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களில் பலர் நேற்று நாடாளுமன்றத்துக்கு சமுகம் தந்திருக்கவில்லை.

அதிருப்திக் குழுவைச் சேர்ந்தவர் எனக் கருதப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர, தான் கட்சி மாறப்போவதில்லை எனவும், ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் தொடர்ந்து இருக்கப் போவதாகவும் அறிவித்திருக்கின்றார்.

இதேசமயம் -

ஏற்கனவே ஐதே.கட்சியில் இருந்து பிரிந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்திருக்கும் எம்.பிக்களுடன் ஐதே.கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் நேற்று பேச்சு நடத்தியதாகத் தெரிகின்றது.

ஐ.தே.கட்சியிலிருந்து பிரிந்து சென்று அரசில் அங்கம் வகிக்கும் குழுவின் சார்பில் முன்னாள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் குழுவினரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம்.பிக்களும் நாளை நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும் சமயம் கட்சி மாறுவர் என்று ஐ.தே. கட்சித் தலைவர்கள் நம்புகின்றனர்.

இதேசமயம் -

எஸ்.பி.திஸநாயக்க, ஜி.எல். பீரிஸ் ஆகியோர் தலைமையிலான அரச அதிருப்திக் குழுவில் இணைவதற்கு மேலும் சில எம்.பிக்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாக அதிருப்திக் குழுவின் தரப்புத் தொடர்பாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

அரசு அதிருப்தியாளர் குழுவினர் இன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டி, தமது தற்போதைய நிலைப்பாடு குறித்து விளக்கமளிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(உ)

# நாடாளுமன்றைக் கலைக்கும் நோக்கம் ஏதும் கிடையாது

## மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு,ஒக்.10

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்படுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ நாடாளுமன்றைக் கலைக்கும் நோக்கம் அரசுக்குக் கிடையாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பிரதி அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இந்தப் பிரேரணையைத் தோற்கடிக்கும் தகுதியை அரசு கொண்டிருககின்றது என்றும் -

லட்சக்கணக்கில் மோசடி செய்துள்ள சில வர்த்தகர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணம் கொடுத்து வாங்க முற்படுகின்றார்கள் என்றும் - அவர் தெரிவித்தார்.

அரசைக் கவிழ்க்கச் சதி செய்யும் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் தலைமைப் பதவியில் இருந்தே தூக்கி வீசப்படுவார் என்றும் அவர் கூறினார். (க-3-9)

# கோப்பாய் திருட்டுக் கோஷ்டியின் முக்கிய நபரும் பிடிபட்டார்

யாழ்ப்பாணம்,ஒக்.10

கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுக்கள் - தொடர்பாகத் தேடப்பட்டு வந்த முக்கிய நபர் அப்பகுதி மக்களால் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இப்பகுதியில் இவ்வளவு காலமும் இடம்பெற்று வந்த திருட்டுக்களுக்குக் காரணமானவர் எனக் கருதப்படும் திருடர் கோஷ்டி ஒன்று கடந்தவாரம், இப்பகுதி மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டது தெரிந்ததே.

இக்கோஷ்டிக்குத் தலைமை வகித்து வந்ததாகக் கருதப்பட்டவரான கோப்பாயப் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் என்பவரே நேற்று உரும்பிராய்ப் பகுதியில் வைத்து பிடிக்கப்பட்டவராவார். கடந்த மூன்று தினங்களாக இரவுபகலாக இவரைத் தேடி அலைந்த அப்பகுதி சமூகநலன் விரும்பிகளால் உரும்பிராய்ப் பகுதியில் வைத்து மேற்படி நபர் துரத்திப் பிடிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-15-72)

### பீரிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதைத் தடுப்பதற்காக அரசின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது என்றும் -

இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் நாடாளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை நேற்றுப் பிற்பகல் எழுப்பினார். (க-3)

### அரச தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டது. ஆனால் எமக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அரசுக்குக் கடந்த காலங்களில் ஆதரவளித்ததன் மூலம் எம்மீது வீசப்பட்டுள்ள சேற்றை களனிகங்கையில்தான் கழுவவேண்டும் என்றார்.

அதேவேளை - பந்துல குணவர்த்தனாவைத் தூதுவர் ஒருவர் மூலம் ஜனாதிபதி தமது செயலகத்துக்கு அழைத்துக் கலந்துரையாடினார் என்றும் -

ஜனாதிபதி தெரிவித்த ஆலோசனையின் பேரில் தொடர்ந்து அரசில் அங்கம் வகிக்க அவர் இணங்கினார் என்றும் அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி - தனியார் வானொலி ஒன்று நேற்றிரவு தகவல் வெளியிட்டது. (க-3-9)

# கண்ணீர் அஞ்சலி

யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. ஆசிரியை
செல்வி ந.மனோன்மணி அவர்களது
அன்புத் தாயார்

**திருமதி நடராசா இராசலட்சுமி அம்மா**

அவர்களது மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
*யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.*

(C/18633)

# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா இராசலட்சுமி அம்மா

### (இராசம்மா அக்கா)

வரணி, கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த நடராசா இராசலட்சுமி அம்மா அவர்கள் நேற்று (09-10-2001) செவ்வாய்க்கிழமை அமரராகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா பத்தர் - தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், தியாகராசா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - கொடிகாமம்), சின்னத்தங்கம், முத்துலட்சுமி, கமலாதேவி, மனோன்மணி (ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், அழகராசா (பத்தர்), ஆனந்தராசா, சோமசுந்தரம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற கந்தசாமி (நகைத் தொழிலகம், வரணி), ஆறுமுகசாமி (சீதா நகைத் தொழிலகம், கொடிகாமம்), நவரத்தினசாமி (ஆசிரியர், சாவ.இந்துக் கல்லூரி), மகாலிங்கம் (நகைத் தொழிலகம், கொடிகாமம்), சோதிலிங்கம் (மெக்கானிக், வரணி), சந்தானலட்சுமி, முத்துலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்ஷனி (எழுதுவினைஞர், பிரதேச சபை, பளை), ராகினி (முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), குமணன் (சாவ.இந்துக் கல்லூரி மாணவன்), பிரதீபன் (யா/வரணி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (நாளை (11-10-2001) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் தற்காலிக இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் கிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந.தியாகராசா (மகன்),
தற்காலிக முகவரி:-
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி. (நாவலர் மடம்)*

நிரந்தர முகவரி:-
*கரம்பைக் குறிச்சி,*
*வரணி.*

(C/18632)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.